பக்கங்கள் 8 ★ ★ விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

மலர்: 19 பங்குனி 22 ரபி ஆகிர்: 14 இதழ்- 53
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 4-4-77

# நாட்டைப் பிரிக்காதீர்; 20 அம்சத்திட்டமும் வேண்டாம்

## கொழும்பில் பெருமளவு சுவரொட்டிகள்

கொழும்பு, ஞாயிறு

''நாட்டைப் பிரிப்பதற்கு அனுமதிக்கக்கூடாது; 20 அம்சதிட்டத்தை அரசு ஏற்றுக் கொள்ளக்கூடாது!

இவ்வாறுகூறும் சுவரொட்டிகள் கடந்த 3 நாட்களாக கொழும்பு மாநகரில் காணக் கூடியதாகவுள்ளது. நகரின் பல்வேறு இடங்களிலும் பரவலாக இந்தச் சுவரொட்டிகள் காணப்படுகிறது.

நாடு பிரிக்கப்படக்கூடாது; 20 அம்சதிட்டத்தைக் கொடுக்கக்கூடாது என்று சுவரொட்டிகளில் எழுதப்பட்டுள்ளது. இவற்றை யார் வெளியிட்டார்கள் என்ற தகவல் எதுவும் இல்லை.

அதேவேளையில் இன்று திங்கட்கிழமை இதுசம்பந்தமான ஆர்ப்பாட்டக்கூட்டம் ஒன்று பொரளை வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறும் என்று சுவரொட்டிகளில் எழுதப்பட்டுள்ளது. (ம-ஆ)

# மூதறிஞரின் சத்திரசிகிச்சை

# இழைகள் நீக்கப்பட்டன!

## அமைச்சர் தென்னக்கோன் செல்வாவைப் பார்த்தார்



யாழ்ப்பாணம், திங்கள்

கலாச்சார அமைச்சர் திரு. டி.பி. தென்னக்கோன் மூதறிஞர் செல்வாவை நேற்றுச் சென்று பார்வையிட்டார். அமைச்சின் செயலாளர் திரு. கே. எச். எம். சுமதிபாலாவும் அமைச்சருடன் யாழ். பெரியாஸ்பத்திரிக்குச் சென்று 16-ம் வார்ட்டில் குளிரூட்டப்பட்ட அறையில் சிகிச்சைபெற்றுவரும் மூதறிஞரைப் பார்வையிட்டனர்.

அமைச்சர்தென்னக்கோனும் செயலாளரும் திருமதி செல்வநாயகத்துடன் மூதறிஞரின் உடல் நிலைபற்றிக் கேட்டறிந்தனர். அமைச்சர் வார்டுக்குள் நுழைந்ததும் மூதறிஞரை நோக்கி இருகரம் கூப்பி வணக்கம் செலுத்தினர்.

### மூதறிஞரின் இழைகள் அகற்றப்பட்டன

இதேவேளை மூதறிஞரின் தலையில் சத்திரசிகிச்சையின்போது போடப்பட்டிருந்த எட்டு இழைகளில் ஆறு இழைகள் இன்று அகற்றப்பட்டன. இவை அகற்றப்படும்போது அவருக்கு வலி ஏற்பட்டதனை வெளிபடுத்தும் வகையில் அவரது உடல்சற்றே அசைவுற்றது.

மூதறிஞரின் உடல்நிலையில் படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

மூதறிஞரின் தலையில் சத்திரசிகிச்சையின்போது ஏற்பட்ட ரணம் ஆறிவருவதே இழைகள் பெரும்பாலானவை அகற்றப்பட்டதற்கான காரணம்என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ஆ-நி-உ)

## பாலசரஸ்வதிக்கு பத்மவிபூஷண் விருது

புதுடில்லி, ஏப். 3

இந்திய பரதநாட்டியமேதை பாலசரஸ்வதிக்கு 'பத்மவிபூஷண்' விருது வழங்கப்பட்டது.

தற்காலிக ஜனாதிபதி திரு. ஜட்டி நேற்று இவ்விருதை வழங்கினார்.

பாலசரஸ்வதி உட்படச் சகல துறைகளிலும் சிறந்து விளங்கிய 58 பேருக்கு நேற்று புதுடில்லியில் நடைபெற்ற

(8-ம்பக்கம்பார்க்க)

# டாக்டர்கள் பிரச்னைக்கு தீர்வு விரைவில்தனிப்பட்டசிகிச்சை

## நிதி, சுகாதார அமைச்சர்கள் இணக்கம்

கொழும்பு, ஞாயிறு

டாக்டர்களுக்கு இளைப்பாற்றுச் சம்பளம் அல்லாத படிக்கொடுப்பனவுகளை இம்மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடக்கிறது.

நிதிஅமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவும் சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகராவும் அரசாங்க மருந்துவர்கள் சங்கம் அரசாங்க வைத்திய நிபுணர்கள் சங்கம் ஆகியனவற்றின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இதற்கு ஒப்புக்கொள்ளப் பட்டது.

அத்துடன் டாக்டர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றான தனிப்பட்ட முறையில் ஆலோசனைகள் வழங்கும் திட்டமும் விரைவில் மீண்டும் அமுலுக்கு கொண்டுவர நிதி அமைச்சரும் சுகாதார அமைச்சரும் இணங்கியுள்ளனர்.

தீர்க்கப்படாதிருக்கும் ஏனைய சில பிரச்னைகள்குறித்தும் இச்சந்தின் போது ஆராயப்பட்டது, சட்டப்படி வேலை, வேலைநிறுத்தம் போன்றநடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்று வைத்தியர்கள் சங்கம் ஒப்புக் கொண்டுள்ளதாக அரசாங்க தரப்புத் தகவல் ஒன்று கூறியது. (ஆ)

### யாழ்ப்பாணத்தில்

# குருகுல கட்டிடம்: அமைச்சர் அடிக்கல் நாட்டினர்

யாழ்ப்பாணம், திங்கள்

''நமது அரசாங்கம் சகல மதங்களுக்கும் சமமானசேவை செய்து வருகின்றது'' என்று கலாச்சார அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கூன் கூறினர்.

அமைச்சர் யாழ்சடைச்சாமி ஒழுங்கை நீராவியடியில் சிவானந்த குருகுலக்கட்டடத்திற்கான அடிக்கல்லை நேற்று நாட்டி வைத்துப் பேசுகையிலேயே இவ்வாறு கூறினர்.

''நான் சென்ற தடவை வடபகுதிக்கு விஜயம் செய்ததிலும் பார்க்க இத்தடவை விஜயம் செய்தது. எனக்குமிகச்சந்தோஷமாகவிருக்கின்றது'' என்றுர் அமைச்சர்.

யாழ் இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நாவலர் மண்டபத்தில் இளைப்பாறிய நீதியாசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''இந்த நாட்டில் இந்து, பௌத்தர் இஸ்லாமியர், கிறிஸ்தவர் போன்ற சமயத்தவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே அவர்களின் தேவைகளையும் அரசும், எமது அமைச்சும் பாகுபாடின்றி ஒரேமாதிரி நற்சேவைகளைச் செய்து வருகின்றது.

'எங்கள் மதத்தைப் பாதுகாப்பதுபோல் ஒவ்வொருமதத்தையும் பாதுகாத்து வருகின்றேன். இந்து மதத்தினதும், பௌத்தமதத்தினதும் ஒற்றுமையை எவ்வளவோ தூரம் எமது அரசு வளர்த்து வந்திருக்கின்றது. இப்பொழுதுஇந்து மதத்திற்கு உள்ள ஒரு குறையை நீக்கும் பொருட்டு சிவானந்தகுருகுலம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இளம் பிராயத்தில் பிராமண சிறுவர்கள் கல்வி கற்க வசதி செய்யப்பட்டுள்ளது. இதே போன்று இந்தியாவில் பல இடங்களிலும் இலவச கல்வி கற்பித்து வரப்படுகின்றது.

''இப்பொழுது இலங்கையில் இந்தக் குருகுலம் அமைக்கப்பட்டது பாராட்டுதற்கு உரியதாகும். இதேபோன்று பௌத்த குருமார்களுக்கும் அனுராதபுரத்தில் பயிற்சி வகுப்பு அளிக்க ஆரம்பித்துள்ளோம்,

''1972ம் ஆண்டு குடியரசு ஆக்கப்பட்டபோது எல்லா மதத்திற்கும் சேவை செய்ய வேண்டும் என பதிவு செய்யப்பட்டது போல் நான் எல்லா மதத்திற்கும் சேவை செய்து வருகின்றேன்.''

(கல்வி. நிரு. உ)

## பல் டாக்டர்கள் வேலை நிறுத்தம் முடிந்தது

கொழும்பு, ஞாயிறு

பல்வைத்தியர்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுவிட்டது. தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நிதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா முன்வந்ததைத் தொடர்ந்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நிதிஅமைச்சர் டாக்டர்களின் தொழிற்சங்கத்தை பேச்சுவார்த்தைக்கு இன்று அழைத்தார்.

கடந்த 30-ம் திகதி முதல் நாடுபூராவுமுள்ள பல்வைத்தியர்கள் பீட்டர்கெனமன் தலைமையிலான அமைச்சு தெரிவித்த கருத்துக்களுக்கு அமைய சம்பளத் திட்டத்தை அமுல் செய்யுமாறுகோரி வேலைநிறுத்தம் செய்துவருவது தெரிந்ததே. (ஆ)

## புயல்! 400 பேர் பலி

டாக்கா, ஏப். 3

பங்களாதேஷில் இடம் பெற்ற புயலினால் சுமார் 400 பேர் பலியாகியுள்ளனர். அத்துடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான வீடுகளும் புயலினால் அடித்துச் செல்லப்பட்டன. பல படகுகளும் மூழ்கின. (ஆ)

## லேத் இயக்குநர் விற்பனையாளர் தேவை

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள லேத் இயக்குநரும் (Lathe man) கொழும்பில் வேலை பார்ப்பதற்கு மும்மொழிகளிலும் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) அனுபவமுள்ள விற்பனையாளரும் (Sales man) தேவை.

உடனே நேரில் வரவும்.

சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்

நீர்வேலி. 5839

## சிந்தெட்டிக் கற்பூரம் பெட்டிகளில்

கிடைக்குமிடம்:

**சென்ற் அந்தனிஸ் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்**

516, ஸ்கின்னர்ஸ் றேட்டுத் தெற்கு, கொழும்பு-10.

போன்: 24261-5

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் குமாரசாமி

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த இராமலிங்கம் குமாரசாமி காலமாகிவிட்டார். இவர் இரா. சுப்பிரமணியம் (யாழ். மாநகரசபை ஆயுள்வேத வைத்தியசாலை), அ. கிருஷ்ணசாமி (ஆயுள்வேத வைத்தியர், யாழ். ஐந்து சந்தி), வி. க. விஸ்வலிங்கம் (யாழ். ஆயுள்வேதக் கல்லூரி விரிவுரையாளர்), செல்வி வி. க. செல்வபாரதி (யாழ். மாநரசபை ஆயுள்வேத வைத்தியசாலை) ஆகியோரின் சகோதரர் ஆவர். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (4-4-77) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் 34, சிவப்பிரகாசம் வீதி இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்: இரா. சுப்பிரமணியம்

5857

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

செல்லமுத்து சுப்பிரமணியம் கைம்பெண் மேரி யோசேப்பின், காங்கேசன்துறை, தற்பொழுது பெந்தகொஸ்தல் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

வாதி

இல: ஈடு/14090

எதிராக

1. வைத்திலிங்கம் வேலாயுதபிள்ளையும் பெண்
2. ஆசைப்பிள்ளையும்
3. மூத்ததம்பி வன்னித்தம்பியும் பெண்
4. சேதுப்பிள்ளையும் எல்லோரும்

தையிட்டி, காங்கேசன்துறை.

பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் M B/14090-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணிகளை 1977-ம் ஆண்டு 18-4-1977 ஏப்ரல் மாதம் 18-ந் திகதி (18-4-1977) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 11,000/-ம் 22-9-1973 தொடக்கம் 10-10-1975 வரைக்கும் ரூபா 6000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 859/06.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று மயிலிட்டி இறை "கரப்புவன்" நில. பர. இலா 6. இதில் கிழக்குப்புறமாக நில. பர. 3ம் வீடும் செய்பயிர் வான்பயிர்களும் மீதக் காணியில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி வல்லிபுரத்தின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு தம்பிப்பிள்ளை கைம்பெண் சின்னத்தங்கத்தின் ஆதனம், தெற்கு கருப்பவன் என அழைக்கப்படும் காணி இதடங்கலும் பதிவு எச் 353/281 இன்னும் வடக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும்.

2. வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று தையிட்டி இறை கரப்புவன் நில பர இலா 2½ம் தென்னை பனைகள், மாமரங்கள் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு கந்தவனம் நடராசாவின் பெண் புவனேஸ்வரியின் ஆதனம் வடக்கு மேலே விபரிக்கப்பட்ட 1-ம் காணி மேற்கு தம்பிப்பிள்ளை கைம்பெண் சின்னத்தங்கத்தின் ஆதனம் தெற்கு சின்னத்தம்பி இளையதம்பியின் காணி இதடங்களிற் சொரியலாய் நாலில் ஒரு பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

3. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டி கோவிற்பற்று தையிட்டி இறை "விளாவத்தை" நில. பர. 2ம் குளி 16½ம் புதிதாகக் கட்டிய வீடும் இன்றும் செய்பயிர் வான்பயிரும் எல்லை கிழக்கு வேலாயுதம்பிள்ளை பெண் நாகம்மாவின் ஆதனம். வடக்கு கையொழுங்கை மேற்கு தம்பிப்பிள்ளை பெண் தங்கப்பிள்ளையின் ஆதனம் தெற்கு டேனியல் பெண் இராக்கினியம்மாவின் ஆதனம் இதடங்கலும். தம்பிப்பிள்ளை கனகசபையின் வடக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க் காலுரித்தும்.

க. சிவஸ்கந்தா,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும் மதிப்பாளரும்.

நாகேந்திர மடம்,
வட்டுக்கோட்டை,
12-03-77.

5849

## இறைச்சிக் கடைகள் குத்தகைக்கான கேள்விப் பத்திர அறிவித்தல்

### சாவகச்சேரி நகராட்சி மன்றம்

1-5-77 முதல் 31-12-77 வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் இறைச்சிக் கடைகளில் வியாபாரம் நடாத்தும் உரிமையில் குத்தகைக்கான பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளாக 19-04-77 முற்பகல் 9-30 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### அட்டவணை

| வியாபாரம் | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|
| 1. மாட்டிறைச்சிக்கடை இல. எல். கியு. 1 சந்தை, சாவகச்சேரி | 100-00 | 10-00 |
| 2. மாட்டிறைச்சிக்கடை இல. எல். கியு. 4 சந்தை, சாவகச்சேரி. | 100-00 | 10-00 |

மேற்படி வைப்புப் பணமும் கேள்விப்படிவக்கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 18-04-77 நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் திருப்பித்தரப்படமாட்டா. சித்திகரமான கேள்விதாரர்கள் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப்பணம் திருப்பித் தரப்படும். கேள்வி வைப்புப் பணமும், படிவக் கட்டணமும் ரொக்மாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

முறைப்படி கேள்விப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் சேர்ப்பிக்கப்படலாம். அல்லது பதிவுக்கடிதம் மூலம் அனுப்பப்படலாம். எந்த வியாபாரத்திற்கு கேள்வி விடுக்கப்படுகிறதுஎன்ற விபரம் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் கடித உறையில் இடது மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரங்கள் அனைத்தையுமோ, எவற்றையேனுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளருக்கு உண்டு.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(அன்ரன் அல்பிறட்)
விசேட ஆணையாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
29-3-77.

5852

## கேள்வி அறிவித்தல்

### சுன்னாகம் பட்டண சபை

## மத்திய சந்தைக் கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை

1-5-77 முதல் 31-12-81 வரை சுன்னாக மத்திய சந்தையிலுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமைக்கான கேள்விகள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து 20-04-1977 நண்பகல் 12-00 மணி வரை சுன்னாகம் பட்டணசபைத் தலைவர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் விண்ணப்பத்தின் பேரில் 19-04-1977 பிற்பகல் 2-30 மணி வரை சுன்னாகம் பட்டணசபைத் தலைவர் அவர்களிடமிருந்து பெறப்படும் படிவங்களிலேயே சமர்ப்பித்தல் வேண்டும்.

3. ஒரு கேள்விப் படிவத்தின் கட்டணமாக ரூபா 10/-ம் கேள்விப் பிணைப்பணமாக 1, 8, 9, 11, 12, 13 இலக்கமுடைய ஒவ்வொரு கடைக்கும் ரூபா 250/-ம், 15, 18, 20, 23, 26 இலக்கமுடைய ஒவ்வொரு கடைக்கும் ரூபா 100/-ம், காசாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ பட்டணசபை அலுவலகத்தில் செலுத்தல் வேண்டும்.

4. கேள்வி நிபந்தனைகளையும் மற்றும் விபரங்களையும் சுன்னாகம் பட்டணசபைத் தலைவர் அவர்களிடமிருந்து காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்
இ. இராசதுரை,
பதில் தலைவர்,
பட்டணசபை,
சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்,
31-3-1977.

### அட்டவணை

| கடை இல. | வியாபாரம் | ஒவ்வொரு கடையினதும் மாதாந்த வாடகை |
|---|---|---|
| 1) 8) 9) 11) 12) | போசனசாலை, தேநீர்சாலை, பலசரக்கு, பழவகைகள். காய் வகைகள், சலவைத் தொழிற்சாலை, சிகையலங்கார நிலையம், அலுமினியம் | ரூபா 225/- |
| 13) | தவிர்ந்த இரும்புச் சாமான்கள், சிமெந்து, பசளை அல்லது உரம் ஆகிய வியாபாரம் தவிர்ந்த ஏனைய வியாபாரம். | |
| 15) | குளிர்பானம்/பத்திரிகைகள் | ரூபா 125/- |
| 18, 20) 23, 26) | பலசரக்கு/புடவை/மணிக்கடை | ரூபா 70/- |

5851

## விளம்பரம்

### விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் 4 3/4 பரப்பில் அடங்கிய வீடும், வளவும் விற்பனைக்குண்டு. முழு விபரத்திற்கும் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். இ. சிவசுப்பிரமணியம், சட்டத்தரணி நொத்தாரிசு, சேர் P. இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

5856

### தேவை

பாண் தயாரிப்பதற்கு நல்ல அனுபவமுள்ளஒருவர் தேவை. நல்ல சம்பளமும் குடும்பத்துடன் தங்குவதற்கு வீட்டு வசதிகளும் செய்துகொடுக்கப்படும். நேரில் சந்திக்கவும். செந்தாமரை பேக்கரி, பாலாவோடைச்சந்தி, காரைநகர்.

5855

### FOR SALE

OLYMPIA DELUXE Portable Typewiter Almost new. Contact: The Tora Limited, 32, Kasturiar Road, Jaffna. Teleph: 7651.

5848

## கேள்வி விளம்பரம்

### மாந்தை மேற்கு கிராமசபை, திருக்கேதீஸ்வரம்

27-4-77-ம் திகதி காலை 9-00 மணிவரை பின்வரும் வேலைக்கான சில்வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 26-4-77-ம் திகதி 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் இன்ன வேலைகளுக்கானகேள்வி எனக் குறிப்பிடல்படவேண்டும்.

குறிப்பிட்ட வேலைக்கான கேள்விப் பத்திரத்தை மேற்படி கந்தோரில் 50/-ரூபா வைப்புப்பணமும், 25/- ரூபா பத்திரப்பணமும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியின் ஒருபிரதி மன்னார் நிறைவேற்றுப் பொறியியலாளருக்கும், மறுபிரதி மன்னார் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பப்படல்வேண்டும்.

வேலை

1. சந்தைக் கட்டிடம்.

பி. பறுனந்து
தலைவர்
மாந்தை மேற்கு கிராமசபை
திருக்கேதீஸ்வரம்.

5838

## கேள்வி அறிவித்தல்

### சுன்னாகம் பட்டணசபை

மீன்சந்தைக் கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை

1-5-77 முதல் 31-12-77 வரை சுன்னாகம் மீன்சந்தையில் மீ-2, மீ-6 ஆகிய இலக்கக் கடைகளில் மீன் அல்லது கருவாடு விற்பனை செய்யும் உரிமைக்கான கேள்விகள், 20-04-1977 நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

19-04-1977 பி. ப. 2-30 மணிக்கு முன்பதாக, ஒவ்வொரு கடைக்கும் கேள்விப் பிணைப்பணமாக ரூபா 100/-ம், கேள்வுப்படிவ விலையாக ரூபா 10/-ம் செலுத்துவதன்பேரில் கேள்விப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரங்களை சுன்னாகம் பட்டணசபைத் தலைவர் அவர்களிடமிருந்து காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்)
இ. இராசதுரை
பதில்தலைவர்,
பட்டணசபை, சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம். 3 -03-77. 5850

# சகல சட்டசபை தேர்தல்களும் விரைவில் நடைபெற வேண்டும்

## பல்லாண்டுகளுக்குமுன் தேர்ந்தெடுத்த உறுப்பினர் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்கிறார் ஜெயப்பிரகாஷ்

புதுடில்லி, ஏப். 3

மத்திய அரசாங்கத்தில் ஏற்பட்ட பெரும் அரசியல் மாறுதலை அடுத்து மாநிலங்களிலும் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே விரைவில் சகல மாநிலங்களிலும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று பம்பாய் ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சை பெற்றுவரும் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆஸ்பத்திரியில் வைத்து நிருபர்களிடம் கூறினார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். எனவே சகலசட்டசபைகளையும் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தல்களை நடத்த வேண்டும் என்றும் இல்லாவிடில் சட்டசபைகளைக் கலைத்துவிட்டு ராஷ்டிரபதி ஆட்சி அங்கு அமுல்செய்யக் கூடியவிதத்தில் அரசியல் சாசனத்தில் திருத்தம் கொண்டு வரப்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஒருவர் ஒரு பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் ஆயுள்காலம் முழுவதும் அவர் அந்தப் பதவியிலிருக்கவேண்டும் என்ற நிலை மாறவேண்டும் என்றும் அவர் கூறினார்.

### கட்சி மாற்றம் பற்றி...

கட்சிமாற்றத்தைத் தாம் எதிர்ப்பதாகக் கூறிய அவர் இப்போது நடைபெறுவது கட்சிமாற்றம் இல்லையென்று இது சாதாரண விழிப்புணர்வே என்றும் கூறினார். கட்சிமாற்றத்தை தடைசெய்யும் சட்டத்தை பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் விரைவில் நிறைவேற்றுவார் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

## ஜனதாதலைவர்கள் காஷ்மீர் விஜயம்

புதுடில்லி, ஏப். 3

ஜனதா கட்சித் தலைவர்களான திருவாளர்கள் அசோக் மேத்தாவும், தேஷ்முக்கும் இம்மாதம் 15-ந் திகதி ஜம்முகாஷ்மீர் செல்கின்றனர்.

இம்மாநிலத்தில் இன்னமும் மூன்று மாதங்களுக்குள் சட்டசபைத்தேர்தல் நடைபெற விருப்பது தெரிந்ததே. (உ)

## "காங்கிரஸுக்குப் புத்துயிர் ஊட்ட புதிய நிர்வாகிகள்"

### தமிழ்நாடு காங். பிரமுகர் கோரிக்கை

சென்னை, ஏப். 3

அகிலபாரத காங்கிரஸ் கமிட்டி விரைவில் கூட்டப்பட வேண்டுமென்றும் காங்கிரஸ் கட்சிக்கு புத்துயிர் ஊட்டும் வகையில் புதிய நிர்வாகிகள் கட்சியில் சேர்த்துக் கொள்ளப் படவேண்டுமென்றும் தமிழ்நாடு காங்கிரஸ் முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. எம். ஆறுமுகசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் நிருபர்கள் மகாநாட்டில் பேசிய அவர், 'காங்கிரஸின் தோல்விக்குக் காரணமாயிருந்தவர்கள் பதவிவிலக வேண்டும்' என்றும் சொன்னார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் விரைவில் கூடி, தமிழ்நாட்டில் காங்கிரசை மேலும் வளர்ப்பதற்குரிய நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார் (உ)

# குற்றம் செய்திருந்தால் இந்திராவுக்கும் தண்டனை

முன்னாள் பிரதமர் திருமதி காந்தி தமது பதவிக்காலத்தில் குற்றம் எதுவும் செய்திருக்கமாட்டார் என்றே நம்புகிறேன். ஆனால் குற்றவாளியாகக் காணப்பட்டால் திருமதி இந்திராவுக்குக் கூட தண்டனை நிச்சயம் வழங்கப்படும். சட்டத்திற்குமுன் நாட்டின் சகல பிரஜைகளும் சமன் என்றும் திரு. ஜெயப்பிரகாஷ் கூறினார்.

மாருதி கம்பனி விவகாரம், நகர்வாலா விவகாரம்போன்ற சகல நடவடிக்கைகள் மீதும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

திரு. ஜெகஜீவன் தலைமையிலான ஜனநாயக காங்கிரஸும் ஜனதா கட்சியும் இன்னும் ஆறு மாதகாலத்திற்குள் முற்றுமுழுதாக இணைந்துவிடுமென திரு. ஜெயப்பிரகாஷ் நம்பிக்கை தெரிவித்தார். (இ)

## நிஜலிங்கப்பா மகிழ்ச்சி

புதுடில்லி, ஏப். 3

லஞ்ச ஊழல், மோசமான ஆட்சிமுறை, சலுகைகளைப் பெறுதல், குறுக்குவழியில் செல்வத்தைத் தேடுதல் ஆகியவற்றை ஜனதா ஆட்சி வெறுத்து வருவது மகிழ்ச்சிக்குரியது என்று ஜனதா கட்சித் தலைவரும் முன்னாள் ஸ்தாபன காங்கிரஸ் தலைவருமான திரு. நிஜலிங்கப்பா நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார். (இ)

## பங்ளாதேஷில் பயங்கர சூருவளி: 325 பேர் பலி!

டாக்கா, ஏப். 3

பங்ளாதேஷின் பல பகுதிகளிலும் நேற்று ஏற்பட்ட பயங்கர சூருவளியால் 325 பேர் இறந்தனர்; 1000க்கும் அதிகமானோர் காயமுற்றனர்.

தூரஇடங்களில்ஏற்பட்ட விளைவுகளை அறிந்து கொள்ளப்பட்டதன்பின்னர் இறந்தோர் தொகை கூடக்கூடும் என்றும் மீட்பு வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன என்றும் டாக்காவில் இருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

## இணைப்புப்பணியகக் கூட்டம் டில்லியில் புதனன்று ஆரம்பம்

புதுடில்லி, ஏப். 3

அணிசேரா நாடுகளின் இணைப்புப் பணியகக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை புதுடில்லியில் ஆரம்பமாகின்றது.

25 நாடுகளின் 21 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர்.

அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தொடரை பாரதப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் வியாழக்கிழமை ஆரம்பித்துவைப்பார். கொழும்பில் நடைபெற்ற அணிசேராநாடுகளின் மாநாட்டின் போது எடுக்கப்பட்டதீர்மானங்களின் பெறுபேறுகள் பற்றி இக்கூட்டத்தில் பிரதானமாகஆராயப் படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தமிழ்நாடு மின் பற்றுக்குறை

புதுடில்லி, ஏப். 3

''தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றுக்குறை நீங்க, மத்திய அரசு தீவிரமாகச்செயற்படும்'' என்று மத்திய எரிபொருள் அமைச்சர் திரு. பி. ராமச்சந்திரன் கூறினார்.

புதுடில்லியில் இதுபற்றி அவர் கூறுகையில் ''தமிழ்நாட்டுக்கு மின்சாரம் வழங்குவதற்கு கேரள மாநிலமும் ஏற்கனவே உடன்பட்டுள்ளது. இந்த உதவியுடன் தமிழ்நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு நீங்க எனது அமைச்சு நடவடிக்கை எடுக்கும்'' என்றார்.

''நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டப்படுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமென்று கூறிய அமைச்சர் இத்தொழிற்சாலையிலிருந்து இப்போது 20 லட்சம் தொன் நிலக்கரி ஏற்றுமதியாகிறதென்றும் இத்தொகை அதிகரிக்கப்படும்'' என்றும் சொன்னார். (உ)

## சட்ட அமைச்சர் மீது ஊழல் குற்றச்சாட்டு

### விசாரிக்க குழு நியமனம்

புதுடில்லி, ஏப். 3

இந்திய முன்னாள் சட்ட அமைச்சர் திரு. கோகலே மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு இந்திய சுப்ரீம்கோர்ட் வழக்கறிஞர்கள் சங்கம் விசாரணைக் குழு ஒன்றை நியமித்துள்ளது.

இந்த விசாரணைக் குழுவுக்கு முன்னாள் அட்டோர்ணி ஜெனரல் ஒருவர் தலைமைதாங்குகிறார்.

ஊழல் நடவடிக்கைகளை மேற்கொண்டமை, பதவியைப் பயன்படுத்தி சலுகைகள் பெற்றமை. அடிப்படைச் சட்டங்கள் பலவற்றை மாசுபடுத்தியமை ஆகியவை தொடர்பாக 50 பேர் அமைச்சர் மேலேமீது குற்றம் சாட்டியுள்ளனர். (இ)

## மத்திய கிழக்குப் பிரச்னை: கார்ட்டர் புதியதிட்டம்

வாஷிங்டன், ஏப். 3

மத்திய கிழக்கில் நிரந்தர சமாதனம் நிலவும் பொருட்டு அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர்புதிய திட்டம் ஒன்றை செயற்படுத்த விருக்கிறார்.

இவ்வாரத்தில் வெள்ளை மாளிகையில் வைத்து எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தை திரு. கார்ட்டர் சந்திக்கும்போது தமதுபுதிய திட்டத்தை எடுத்துரைப்பார்.

மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பாக ஜெனீவாமாநாடு மீண்டும் கூட்டப்படவேண்டும் என்பதையும் திரு. கார்ட்டர் திரு. சதாத்திடம் வலியுறுத்துவார்.

### சதாத் கருத்து

இதே நேரம் மத்திய கிழக்குப் பிரச்னை தீர்வதில் அமெரிக்கா இஸ்ரேலிடம் தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்றும், அல்லது சமாதான முயற்சி சாத்தியமற்றதாகிவிடுமென்றும் பாரிசில் சதாத் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க, லெபனானின் பலபகுதிகளிலும் மீண்டும் பரவலாக சண்டை மூண்டுள்ளதாக பெய்ரூட் செய்திகள் கூறுகின்றன. (உ)

# 24லட்சம்ரூபாகள்ளநோட்டு அச்சடிக்க முனைந்தவர்கள்

## கோவையில் இளம்பட்டதாரி உட்பட 9 பேர் கைது

கோயம்புத்தூர், ஏப். 3

நூறுரூபா நோட்டுக்களாக 24 லட்சம்ரூபா கள்ளநோட்டு அச்சடிப்பதற்கு முற்பட்ட மாஜி பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட ஒன்பது பேர் கொண்ட கோஷ்டி ஒன்றை கோயம்புத்தூர் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

கள்ள நோட்டுகள் ஏராளமானவற்றையும் இவை அச்சடிக்கப்படுவதற்கு பயன்படுத்தப்பட்ட கருவிகளையும் கைப்பற்றியுள்ள பொலிசார் 24 லட்ச கள்ளநோட்டு அச்சடிப்புத் திட்டத்திற்கு நிதியுதவி அளித்தவர் இளம்பட்டதாரி என்ற தகவலையும் விசாரணை மூலம் தெரிந்து கொண்டுள்ளனர்.

1959ம் ஆண்டு கோயம்புத்தூர் ஜில்லாவையே பெரும் பரபரப்பில்ஆழ்த்திய 100ரூபா கள்ளநோட்டு வழக்கில் அப்ரூவராக் இருந்த மணி என்ற நபரே இத்திட்டத்திலும் தீவிர பங்கு கொண்டிருந்தார் என்பதும் பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

தனியான கட்டடம்ஒன்றில் இருந்து பல 100ரூபா நோட்டுகளையும், புளொக்குகளையும், 100 ரூபா அளவில் வெட்டப்பட்ட காகிதங்களையும் பொலிசார் கைப்பற்றினர்.

### 24 லட்சம் ரூபா அச்சடிக்கத்திட்டம்

மொத்தம் 24 லட்சம் ரூபாவை 100 ரூபா நோட்டுக்களாக அடிப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டிருந்தவிபரம்பதவி நீக்கம செய்யப்பட்டிருந்த பொலிஸ்கான்ஸ்டபிள் கைகாகிதத்தையடுத்து பொலிசாருக்குத் தெரியவந்தது.

ஜில்லாவின்பலபகுதிகளிலும் கள்ள 100 ரூபா நோட்டுக்கள் இக்கோஷ்டியால் புழக்கத்தில் விடப்பட்டிருந்தனவாம்.

இக்கோஷ்டி தற்போதுகாவலில் வைக்கப்பட்டுள்ளது. (உ)

•••

## சிவாஜி, எம். ஜி. ஆர். அஞ்சலி

சென்னை, ஏப். 3

காலஞ்சென்ற தமிழ்சினிமா டைரக்டரும் தயாரிப்பாளருமான திரு. ஏ. பி, நாகராஜனின் பூதவுடலுக்கு நடிகர்திலகம் சிவாஜிகணேசன், எம். ஜி. இராமச்சந்திரன், சிவகுமார் ஆகியோர் உட்பட பல நடிகர்கள் நேற்றுத்தமது இறுதிஅஞ்சலியைச் செலுத்தினர்.

நடிகைகள் சாவித்திரி, விஜயகுமாரி, மனோரமா ஆகியோரும் திரு. நாகராஜன் வீட்டுக்குச்சென்று அஞ்சலி செலுத்தினர். (இ)

### மணிவாக்கு

பொறுமையுடையவனுடைய மனசிலே ஒரு போதும் இன்பமும் அமைதியும் உண்டாகா.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

ஈழநாடு
THE EELANADU

## "பேச்சு வார்த்தைகள்"

தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு சுமுகமான நிரந்தர தீர்வுகாண்பதற்கான முயற்சிகளில் இப்போது 'பேச்சு வார்த்தைகள்' நடைபெற்று வருகின்றன.

தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளை அறிந்துகொள்வதற்கு, அவர்களின் பிரதிநிதிகளைச் சமீபத்தில் பிரதமர் அழைத்திருந்தார்.

இதைத்தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை இரண்டுதடவைகள் பிரதமர் அழைத்துப் பேசியிருக்கின்றார். தொடர்ந்தும் சந்திப்புக்கள் நடைபெறலாம்.

இடதுசாரித் தலைவர்கள் சிலரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சிலரைச் சந்தித்துப் பேசியிருக்கின்றனர். மேற்கொண்டும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

தமிழ் இளைஞர்பேரவைத் தலைவர்களையும்இடதுசாரித் தலைவர்களையும் சந்தித்துப் பேசியிருக்கின்றனர். தொடர்ந்தும் பேச்சுவார்த்தைக்கு முயற்சிகள் நடைபெறுகின்றன.

தமிழர் பிரச்னைகள் சம்பந்தமாகத் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களை ஐக்கியதேசியக்கட்சித் தலைவர் அழைத்துப்பேசவேண்டுமென்று அக்கட்சியின் பிரமுகர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீது வற்புறுத்தியிருக்கிறார்.

இவையெல்லாம் நல்ல அறிகுறிகளே.

தமிழ்மக்களுக்குப் பிரச்னைகளுண்டு; அவர்களுக்குக் குறைகள் நிறைய இருக்கின்றன; அவற்றுக்குத் தீர்வு காணப்படால்தான் நாட்டில் அமைதிநிலவும், நாடும் முன்னேறும் எனபதைப் பெரும்பான்மைச் சமூகத்தைச்சேர்ந்த கட்சிகளும் உணர்ந்து ஒப்புக்கொண்டுள்ளன என்பதையே இந்தப் பேச்சுவார்த்தைகளும்; அதற்கான முயற்சிகளும் எடுத்துக் காட்டுகின்றன.

பேச்சு வார்த்தைகளால் எந்தப்பிரச்னைக்கும் தீர்வு காணமுடியுமென்பது தவறல்ல.

ஆனாலும் தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு ஒரு தீர்வு காணுமுகமாக அமரர் எஸ். டபிள்யு. ஆர். டி.பண்டாரநாயக்காவுடன் தமிழ்த்தலைவர்கள் இரவு பகலாகப் பேசுவார்த்தை நடத்தி ஒரு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டனர்.

அந்த ஒப்பந்தம் பின்னர் கிழித்தெறியப்பட்டது!

அமரர் டட்லி சேனநாயகாவுடனும் தமிழ்த் தலைவர்கள்பேச்சுவார்த்தை நடத்தினர். ஒப்பந்தமும் செய்துகொண்டனர்.

அதுவும் செயல்படவே இல்லை.

ஒரு கட்சியுடனே, ஓர் அரசாங்கத்துடனே இதுவரை தமிழர் பிரச்னை சம்பந்தமாகத் தலைவர்கள் நடாத்திய பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும்பயன்படவே இல்லை.

இப்பொழுது அதுவும் அடுத்த பொதுத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கையில் தமிழ் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பது சம்பந்தமாக ஆட்சிப்பீடத்தில் அமரும் வாய்ப்பைப் பெறும் பெரும்பான்மைக் கட்சிகள் அக்கறை காட்டுகின்றன.

இதன்படி பார்த்தால் தமிழர் பிரச்னை இன்னமும் தேர்தல் பிரச்னைதான்!

தமிழர் பிரச்னையைத் தேசியப் பிரச்னையாகக்கருதி பெரும்பான்மைக் கட்சிகள் கட்சி அரசியலுக்கப்பால் தீர்வு காண முன்வராத வரை இந்தப் பிரச்னை எந்தச் சமயத்தில், என்ன உருவம் எடுக்குமென்று சொல்ல முடியாது.

அரசியல் கட்சிகள் இது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தட்டும்.

ஆனால் பேச்சு வார்த்தைகளையும் ஒப்பந்தங்களையும் மட்டும் எதிர்பார்த்து நம்பியிருப்பது போதாது.

தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கான சரியான அத்திபாரம் இன்னமும் இடப்படவில்லை.

அரசாங்க சம்பளத்தையும், பென்ஷனையும் தான் இன்னமும் பல குடும்பங்களும் நம்பியிருக்கின்றன.

விடுதலைப் போராட்டம் என்பதிலேயே கடந்த பல வருடங்கள் கழிந்து விட்டன.

பொருளாதார விடுதலை என்று மேடைகளில் பேசப்பட்டுவந்ததுடனும் திட்டங்கள் தீட்டுவதற்குக் குழுக்கள் நியமிக்கப்பட்டதுடனும் சரி.

இந்திய விடுதலைப் போராட்டம் வெற்றியளிக்கவும் அங்கு அன்றும் மக்களின் உள்ளத்தில் தேசபற்று உறுதியாய் நிலைபெற்றிருக்கவும் காந்தி மகாத்மா வகுத்தநிர்மாணத்திட்டமே மூலகாரணமாகும்.

அதேபோல் கதர் இயக்கம், தீண்டாமை ஒழிப்பு, சீதன ஒழிப்பு போன்ற திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்துவது சமூகத்துக்கு மட்டுமல்ல நாட்டின் முன்னேற்றத்துக்குமே பெரும் பயனளிக்குமென்று உறுதியாக நம்பலாம்.

---

ஆசிரியருக்குக்கடிதம்;:

## 'சீதன ஒழிப்பு' முறை மாறுமா?

யாழ்ப்பாணத்தில் தொன்றுதொட்டு நடந்துவரும் கேடுகெட்ட சீதன ஒழிப்பு முறையைத் தீவிரமாக மாற்றும் முறையில் அமுல் நடத்த இன்றைய இளைஞர்கள் முன்வருவார்களா?

சீதனம் வேண்டும் இளைஞர்கள், தாய், தந்தையர்கள் இதே சீதனத்தைத் தம் மனைவியாக ஏற்றுக்கொள்ளும் இல்லத்காளுக்கும் அவளுடைய தாய் தந்தையருக்கும் ஏன் கொடுக்கக்கூடாது?

தாய்மையுற்று வீட்டு வேலைகளை இனிது நடாத்தி ஆண்மகனுக்குப் பணிவிடை செய்து, அவனின் தாய்-தந்தையரையும் கவனித்துப் பல சுமைகளையும் முகம் கோணாது தாங்கி, சேவையாற்றும் இல்லத்தரசிக்கு, அல்லது அவளைப் பெற்றெடுத்த தாய்தந்தையருக்கு இன்று சீதனம் கேட்டு வாங்கும் இளைஞர்கள், திரும்ப வழங்குவார்களா? இல்லாவிடில் இனிமேலாவது சீதனம் வேண்டியதில்லை எனச் சங்கற்பம் செய்வார்களா?

சிந்தித்துச் செயலாற்றும் நண்பர்களிடம் கேட்கிறேன் இளைஞர்கள் முன்வருவார்களா?

ஆர். சண்முகராஜா
யாழ்ப்பாணம்.

---

# பெரியோர் போற்றிய பொன்னைய வள்ளல்

'ஈழகேசரி' பொன்னையா அவர்களின் நினைவுதினம் இன்றாகும். அப்பெரியாரைப்பற்றிப் பெரியோர் சிலர் அந்தந்த நேரங்களில் கூறிய கருத்துக்கள் சிலவற்றை இன்று இங்கு திரட்டித்தருகிறோம். [ஆ—ர்]

● யாழ்ப்பாணத்திலே தர்மஸ்தாபகர்கள் என்று சொல்லப்படுபவர்களுள்ளே, மகான் டாக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள், திரு. நா பொன்னையா ஜே.பி. அவர்கள்ஆகிய இருவர்களின் அநுதாபங்களைப் பெறாதவர்கள் இல்லை என்றே சொல்லலாம். திரு. பொன்னையா அவர்கள் ஈழத்தைக்கடந்து இந்தியாவிலேயும் பலதர்மங்களுக்கு ஆயிரக்கணக்கில் வழங்கியிருக்கிறார்கள்.

—பண்டிதமணி திரு.சி. கணபதிப்பிள்ளை

● பத்திரிகைத்தொழில் என்றால் ஊதியமில்லா தொழில் என்றும் குறைவான மதிப்பென்றும் பல பெற்றோர்கள் கருதியிருந்த அந்தக் காலத்தில் என்போன்ற சில இளைஞர்கள் துணிந்து அந்தத்துறையில் இறங்கியதற்கும், இன்று நல்ல நிலையில் இருப்பதற்கும் காரணம் 'ஈழகேசரி' அதிபர் பொன்னையாவின் முன்மாதிரியும் அவரது ஊக்கமும் ஆதரவும் நட்புரிமையும்தான்.

—சோ. சிவபாதசுந்தரம்

● தரணிதரு மிகுபுகழோன் குருபசிட்டித்
தன்பதியிற் சன்மார்க்க சபைதாபித்தோன்
திருமகளச் சகத்துடனே சிறந்த 'ஈழ'
கேசரியுந் தந்தளித்த செல்வச்சீமான்
கருணையுட னேழைகளைக் காக்கும் வள்ளல்
கலாபீடங் கட்குதவும் கன்னியசிலன்
பெருமைபொறை யாண்மை [தயை
பிறங்கு செம்மல்
பெட்புமிகு பொன்னைய ரூமம் வாழி.

பிரேமசுந்தரன்

### "செல்வா ஒரு தீர்க்கதரிசி"

கல்வியங்காடு, ஞாயிறு
தீர்க்கதரிசியான தந்தை செல்வாவின் கூற்றுக்கள் என்றுமே பொய்த்ததில்லை. அது இனியும் பொய்க்காது என்பது எமக்கு இன்று தெளிவாகிவிட்டது. தந்தை குணமடைந்து வருகிறார். அவர் விரைவில் பூரணசுகமடைந்துஎமதுஇலட்சியப்பணிக்கு தலைமை தாங்குவார் என்பதில் ஐயமில்லை."

இவ்வாறு கல்வியங்காடு சந்திக்குஅருகிலுள்ள ஸ்ரீவைரவர் கோவில் முன்றலில் திரு. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற தமிழ்இளைஞர்பேரவை பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில் வண்ணை ஆனந்தன் கூறினார்.

திருவாளர்கள் மு. ஆலாலசுந்தரம், பொன். மதிமுகராசா முதலானோரும் பேசினர். (உ)

---

# பத்திரிகை வித்தகர்

"பத்திரிகையாசிரியரின் வேலை எளிதானதன்று. 'இந்துசாதனம்' பத்திரிகையில் 25வருடகாலமாக ஆசிரியராக திரு. சிவப்பிரகாசம் அவர்கள் பணிசெய்தது ஒரு பெரியசாதனையே. இவ்வளவு நீண்டகாலமாக பத்திரிகையைத்திறம்பட அவர் பதிப்பித்து, சிறப்பாக இந்துக்களுக்கும் பொதுவாகத் தமிழருக்கும் தொண்டாற்றி வந்துள்ளார். திரு. சிவப்பிரகாசம்அவர்கள் நீடூழிவாழவும் இந்துசாதனத்தின் ஆசிரியராக இன்னும் பல்லாண்டுகள் பணி செய்யவும் வாழ்த்துகின்றேன்".

என்றிவ்வாறு பெரியார் எஸ். ஜே. வி. அவர்கள் அன்புடன் அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியை வெள்ளிவிழா மலரில் படித்ததும் என்உள்ளம் நெகிழ்ந்தது. ஒரு பத்திரிகையாசிரியரின் பொறுப்பையும் கஷ்டத்தையும் பொதுவாக எவ்வளவுபேர் உணர்கிறார்கள்? உணர்ந்தாலும் எவ்வளவுபேர் வாய்விட்டுப் பாராட்டுகிறார்கள்.

●

ஆசிரியரின்வெள்ளிவிழாவை சிறப்பாகக் கொண்டாடிய சைவபரிபாலன சபையாரைப் பாராட்டவேண்டும். எவ்வித ஊதியமும்வாங்காமலேசேவை செய்துவந்துள்ள அவருக்கு நன்றிசெலுத்த வேண்டியது பொதுமக்களின் மேலான கடமையாகும்,

எழுத்தாளனுக்கும் பொதுவாகக் கலைஞர்களுக்கும் காசு பணத்தைவிட மகிழ்ச்சியும் உற்சாகமும் அளிப்பது மனம் நிறைந்த பாராட்டுகளே. உங்கள் எழுத்தும் கலையும் மிகநன்றாக இருந்தது என்று யாரும் பாராட்டினால், அதுஅவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்தது மாதிரி. அதிக உற்சாகத்துடன் அவர்கள் தங்கள் பணியைச் செய்ய அது தூண்டுகோலாக இருக்கும். விழாவன்று ஆசிரியரைப் பலரும் அமோகமாகப் பாராட்டினர். இனி அவரிடம் அதிக பணியை எதிர்பார்க்கலாம்.

●

அவருக்கு வயது சுமார் 50 இருக்குமென்றே நினைத்தேன் ஆனால் அவருக்கு இப்போது வயது 70 என்று வெள்ளிவிழா மலர் மூலம் அறிந்ததும் வியப்புற்றேன். பொன்னாடை போர்த்திக்கொண்டு அவர் மேடையில் அமர்ந்திருந்த காட்சி மணவறையில் புதுமாப்பிள்ளை அமர்ந்திருப்பதுபோல இருந்தது. புன்முறுவல் பூத்த அவரதுமுகம், அவரதுவெள்ளை உள்ளத்தைக் காட்டுகின்றது. அவரும் அவரது பணிகளும் நீடூழிவாழ்க!

### ஐயாறன் எழுதுவது

●

விழாவுக்குத் தலைமைதாங்கிய நீதிஅரசர் சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு ஐம்பது ஆண்டுகளாக, ஆசிரியர் அவர்களுடன் பழக்கமுண்டாம். யாழ்ப்பாணத்தில் சிறுவயதிலேயே அவர்கள் வீட்டிலே பிரார்த்தனை வழிபாடுகளில் இருவரும் ஈடுபட்டிருந்ததாகவும் சட்டப்புத்தகங்களை தமக்குச்சிறுவயதிலேயே கொடுத்து சட்டம் படிப்பது கடினமல்லவென்றும் கூறித் தம்மை ஊக்கியதாகவும் இன்றேல் சட்டத்தரணியாகத் தாம் வந்திருக்க முடியாதென்றும் ஆசிரியர் நன்றியுடன் தமது பதிலுரையில் தெரிவித்தார். பத்திரிகாசிரியர் தொழிலும் அநேகமாக நீதிஅரசரைப் போன்றதுதானே!

இந்துமாமன்றத்தின்புதிய தலைவராக நீதிஅரசர் சிவசுப்பிரமணியம் அவர்கள் ஒருமனதாக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டது மிக மகிழ்ச்சிக்குரியது. இதற்காக சிறந்த இந்துக்களைப் பாராட்டவேண்டும்.

தாழ்வுற்ற இந்துசமயத்தைக் கைதூக்கி விடுவதற்கு இன்னும் பல பல காரியங்களை செய்யவேண்டியுள்ளன. இச்சமூகத்தை முன்னேற்றவும் மக்களுக்கு மேலான தொண்டாற்றவும் இவ்விரு பெரியார்களையும் இனி எப்படி எல்லாம் திருவருள் ஊக்குவிக்கப் போகின்றதோ!

---

### இன்று

யாழ்ப்பாணம், திங்.
வடலியடைப்பு - பாரத்தனை ஐயனார்ஆலய வருடாந்த குளிர்த்திவிழா இன்று காலை விசேட அபிஷேக ஆராதனைகளுடனும் நண்பகல் அன்னதானத்துடனும்நடைபெறுகிறது.

மாலை ஆசிரியர் திரு. கேனு. நடராசா "ஐயப்பன் அருள்" என்னும் பொருள்பற்றிச் சிறப்புரை நிகழ்த்துவார்.

புலவர் கா. வேல்முருகன் 'புராதன சமய வரலாறும் சமய வளர்ச்சியும்' என்னும்பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துவார்.

பரிபாலனசபையாரின்முயற்சியாலும் அவ்வூர் மக்களின் முயற்சியாலும் சென்றஆண்டு நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து இவ்வாண்டு இன்று தொடக்கம் பத்துநாட்கள் எழுந்தருளி கொண்டு திருஉலா நடைபெறவிருக்கின்றது. சரவணை கந்தையா என்பவரால் உருவாக்கப்பட்டுள்ள இவ்வாலய ராட்சதமணி ஒரு திசையறி கருவியாக பலமைல்களுக்கப்பால் ஒலிக்கும் திறமைவாய்ந்தமை எல்லோராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் ஒவ்வொரு பங்குனித் திங்களிலும் அன்னதான குளிர்த்தித் திருவிழா நடைபெறத் தவறுவதில்லை.

மேலும் ஆலயபரிபாலன சபையினர் திறம்படஇயங்குவதால் இப்பகுதியில் இவ்வாலயம் பேரோடும் புகழோடும் விளங்குகின்றது. (கிளி-நி-உ)

### நயினை வீரகத்தி விநாயகர் கொடி

நயினை, செம்மணத்தம்புலப் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவம் இன்று ஆரம்பமாகியுள்ளது. 10-ந் திகதி ரதோற்சவம் நடைபெறும்.

[கிளி-நி-உ]

# குமாரசூரியர் தலைமையிலான சுதந்திரக்கட்சி தமிழர் அபிலாஷைகளை நிச்சயம் நிறைவேற்றும்

## திருவாதவூரனுக்கு இராசசிங்கம் பதில்

அன்புள்ள திருவாதவூரனுக்கு

நாடகபாணியில் அமைந்த தங்களின் 26-3-77 திகதிய கடிதம் எனக்கும் திரு. ஸி. சுந்தரலிங்கம் ஐயாவுக்கும் இடையில் நடைபெறும் விவாதத்தில், இடைச்செருகலாகும்.

இன்று நடைபெறும் விவாத அரங்கத்திலே தாங்கள் குறுக்கீடு மனுதாரர்.

கரியைப் பரியாக்கி திருவாசகத்தை தீந்தமிழில் பாடி சுவையூட்டிய மாணிக்கவாசகருக்கும் தமிழ் சொந்தம். தமிழை எழுதி, எழுத்தாளனாக இருக்கும் எனக்கும் தமிழ் சொந்தந்தான். அதேபோல தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சகலருக்கும், தமிழ் சொந்தமாகும். எனவே தமிழைப்போற்றி அதன் வளர்ச்சி வீழ்ச்சி, இவைகளுக்கு பொறுப்பாக இருந்தவர்கள், இருப்பவர்கள் பற்றி எல்லாம் எழுதப், பேச, விமர்சிக்க சகலருக்கும் உரிமை உண்டு.

அரசியல் என்பது பவுத்திரமான ஒரு சாத்திரம். அரசியல் பிரச்சினைகள் உருவாகுவதற்கான காரணிகளை முதலில் அறிந்துகொண்டு ஐதுவித அடிப்படைப் பிரமாணத்தின் நாம் இயங்காததால் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்கட்டது என்பதனை ஆராய்ந்து தொடர்ந்தும் அவ்வாறு நிகழாமல் தடுப்பதற்கு அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். இதுவே அரசியல் ரீதியில் பிரச்சினைகளை அணுகுதும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமான மார்க்கமாகும். அதைவிட்டு, தினசரி செய்தித்தாள்களில் வெளிவரும் அன்றாட நிகழ்ச்சிகள் சிலவற்றை, மேடைகளில் உருப்போடுவதும், பேசுவதும் அரசியல் ஆகிவிடாது.

மேலும், அரசியல் கட்சிகள் எல்லாமே மனிதருக்குச்சேவை செய்யும் நோக்கத்துடன் தான் உருவாக்கப்பட்டன. இத்தகைய நோக்கமில்லாமல் ஏதாவது அரசியல் கட்சி உருவாக்கப்பட்டால், அவைகள் அரசியல் கட்சிகள் என்ற வரைவு இலக்கணத்துக்குள் அமைய மாட்டா.

மனிதகுலத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் 1944-ம் ஆண்டளவில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், 1949-ம் ஆண்டளவில் இலங்கைத் தமிரசுக்கட்சி. 1951ம் ஆண்டளவில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பின்னர் 1971ம் ஆண்டளவில் தமிழர் கூட்டு முன்னணி ஆகியன உருவாக்கப்பட்ட.

அரசியல் கட்சிகளில் நாமே, எமது சுய விருப்பத்தின்பேரில் சென்று சேருகிறோம். அவ்வாறுதான் தாங்களும் ஏதோ ஒரு கட்சியில் சேர்ந்திருப்பீர்கள். அவ்வாறு நானும் சுதந்திரக்கட்சியில் சேர்ந்தேன். தங்கள் விருப்பத்திற்குத் தாங்கள் சேர்ந்து கொண்டதற்கு மாசு கற்பிக்க எனக்கு உரிமை கிடையாது. அதே போல நான் சுதந்திரக்கட்சியில் சேர்ந்துகொண்டதைப் பற்றி மாசு கற்பிக்கும் உரிமை தங்களுக்குக்கிடையாது

நான் கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக சுதந்திரக்கட்சியில் சேர்ந்தேன் என்று குறிப்பிட்டிருந்தேன். ஆம் சுதந்திரக் கட்சி ஆட்சிப்பொறுப்பைக் கைப்பற்றமுன்னர் அது எதிர்க்கட்சியாக இருந்து இயங்கிய காலம் தொட்டு அதில் உறுப்பினராக இருக்கின்றேன். நான் இந்தக் கட்சியில் தாங்கள் கற்பனை செய்து கொண்டதைப்போல, ஏதோ சுயநல நோக்குடன் சேர்ந்தேன் என்று கீழ்த்தரமான கட்டுக்கதையை வசதியாக அவிழ்த்து விடலாம் என்பதற்காகள முதினீர்களா?

27-5-70ல் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்கள் மூதூர், திருகோணமலை, கற்குடா, மட்டக்களப்பு கல்முனை, பொத்துவில், மன்னார், கோப்பாய், புத்தளம் போன்ற தமிழ்ப்பிரதேசங்களில் எல்லாம் போட்டியிட்டு கல்முனை, மூதூர், புத்தளம் ஆகிய பிரதேசங்களில் வெற்றியும் பெற்றுள்ளனர். மேலும் 1965ம் ஆண்டு, 1960ம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் போட்டியிட்டுச்சில தொகுதிகளில் வெற்றியும் பெற்றுள்ளார்கள் என்ற விஷயங்கள் தங்களுக்குத் தெரியாத போலும். 1970-ம் ஆண்டில் சுதந்திரக்கட்சியை கிளிநொச்சிபோன்ற தமிழ்ப்பகுதிகளில் அறிமுகம் செய்து வித்திட்டவர், வளர்க்க முயற்சித்தவர், இன்று கூட்டணியில் முக்கிய பிரமுகராக விளங்குகின்றார்.

இன்று தமிழர் கூட்டு முன்னணியின் சிரேஷ்ட அரசியல் தலைவர்களுக்கும், பிரதமருக்கு மிடையில் சந்திப்புக்கள் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. இந்தச் சந்திப்புக்கள், பேச்சுவார்த்தைகள் ஆகியன வெற்றிகரமாக நடைபெற வேண்டியது அவசியம். எனவே இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் கடுமையான வார்த்தைகளையும், குரோதமான அரசியலையும் குறிப்பிட்டுக்கொள்ளாமல் அவற்றைத் தவிர்த்து தங்கள் கேள்விகளுக்கும், தாங்கள் எழுப்பிய விஷயங்களுக்கும் பதில் தருகின்றேன்.

### யாழ்ப்பாண இராச்சியம் இயங்கியது

அரசியலில் அடிப்படைப் பிரச்சினை எவ்வாறு உருவாகின்றது என்பதை ஆராய்ந்துதான், நாம் பரிகாரம்காண முன்வரவேண்டும். எமது பிரச்சினைகள் 1947ம் ஆண்டில்தான் உருவாகிற்று. பிரிட்டிஷாரின் ஆட்சி அஸ்தமித்து, நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில், இன்று அனைவரும்குறிப்பிடும் தமிழ்ஈழத்தை உருவாக்கியிருக்கலாம். முதன்முதலாகப் போர்த்துக்கேயர் இலங்கைக்குவந்தசமயம் யாழ்ப்பாணஇராச்சியம் என்ற அரசு இயங்கிற்று. பின்னர் இந்த இராசதானி போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் பிரிட்டிஷாராலும் கைப்பற்றப்பட்டுக் கைமாறலாயிற்று. கோல்புறாக் ஆணைக்குழுவின் சிபார்சை அடுத்துத்தான் நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை அமுலுக்கு வந்தது. இந்த விஷயம் எமது தலைவர்களுக்குத் தெரியாதது அல்ல.

இருந்தும் 1947ம் ஆண்டில் இருந்த எமது தலைவர்கள் பிரிட்டிஷாரிடம் எமது நிலையைக் குறிப்பிட்டுப் போராடி, 1803-01-01ல் வெளிவந்த அரசின் உத்தியோக பூர்வமானபட்டத்தின்படி 'நாட்டைப் பிரித்துத் தா' என்று கேட்காமல் ஒற்றையாட்சி அமைப்புக்காகப் போராடியுள்ளனர். எனவே ஏன் இவ்வாறு அன்று செய்யவில்லையென்று கேட்பதற்குத் தமிழன் என்ற முறையில் எனக்கும் என்னை ஒத்தவர்களுக்கும் உரிமையுண்டு. எனது உரிமையைத் திரு.ஸி.சுந்தரலிங்கம்ஐயா ஏற்றுக்கொண்டுதான் எனது கடிதங்களுக்குப் பதில் எழுதிவருகின்றார் என்பது எனது நம்பிக்கை.

இன்று நாம் ஒரு பொதுத் தேர்தலை எதிர்நோக்கியிருக்கின்றோம். எனவே பலர், "இன்று பதவிவகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் நியமனம் வழங்க வேண்டாம். இவர்கள் இத்தனை வருட காலமாக என்னத்தை வெட்டி வீழ்த்தினர்கள்? நாட்டிற்கும் இனத்திற்கும் இவர்கள் சாதித்தது என்ன? எனவே இவர்களுக்கு அடுத்த பொதுத் தேர்தல் காலத்தில் நியமனம் வழங்க வேண்டாம்'' என்று கட்சிகளின் தலைமைப்பீடங்களுக்கு அவசரத் தந்திகள், கடிதங்கள் மகஜர்கள் ஆகியன அனுப்பி வைக்கப்படுகின்றன அல்லவா? இவைகள் எல்லாம் இன்று

**விவாதமேடை**

மக்கள் பெற்றுள்ள அரசியல் விழிப்புணர்ச்சியைத்தான் வெளிக்காட்டுகின்றன.

இன்றுள்ள மாதிரி 1952ம் ஆண்டிலும் மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சியைப் பெற்றிருந்தால் குறுக்கீடு மனுதாரர்களாகத் தாங்கள் வரவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது. உரிய நேரத்தில் பஸ் தரிப்பு நிலையத்திற்கு வந்து, பஸ்வண்டியைப் பிடிக்காமல் கோட்டைவிட்டுவிட்டு அதன் பின்னர் பஸ்வண்டியை ஓட்டும் சாரதியை, அந்த வண்டியை நிர்வகிக்கும் ஸ்தாபனத்தைத் திட்டிப் பிலாக்கணம் வைப்பவர்களை அன்றாட வாழ்க்கையில் சந்திக்கின்றோம்

இதேபோல எமது அரசியலிலும் சில தலைவர்கள் சம்பவங்களை நிகழவிட்டு, அதனால் தள்ளப்பட்டு இழுபட்டுக் கொண்டேபோகின்றனர். இவ்வாறு இழுபட்டுக்கொண்டே அரசியலில் போகின்றவர்கள், தங்கள் ஆற்றுமையை, இயலாமையை மூடிமறைக்க உணர்ச்சிப் பிழம்பாக மாறுகின்றனர்.

1970-ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய இடதுசாரி முன்னணிக் கட்சிகள் இந்நாட்டைகுடியரசாகப் பிரகடனப்படுத்த ஓர் அரசியல் சாசனம் உருவாக்க அமைக்க அதிகாரம் வழங்குமாறு கமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டு, மக்களின் அங்கிகாரத்தைக் கோரினர். நாட்டுமக்கள அங்கிகாரமும் வழங்கினர். இதையடுத்து இதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

ஆனால் தமிழ்ப் பகுதிகளில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள், குடியரசாகப் பிரகடனப்படுத்தும் அரசியல் சாசனத்திற்கு மக்களின் அங்கிகாரத்தைப் பெறவில்லை. எனவே இவர்கள் குடியரசாக உருவாக்கும் சட்டநிர்ணயசபை கூட்டங்களுக்கு போகமறுத்திருக்க வேண்டும். இவ்வாறு மறுத்திருந்தால் ஐக்கிய இடதுசாரி முன்னணியினர் புதியஅரசியல் சட்டமொன்றை உருவாக்க முடியாதநிலை ஏற்படும்வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். இன்றேல், அவர்களாகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தி, அவர்கள் சமர்ப்பிக்கும் கோரிக்கைகளில் ஒரு பகுதியையாவது அரசு ஏற்று அரசியல் சாசனம் சம்பந்தப்பட்ட அடிப்படைத் தீர்மானத்தில் சேர்த்துக் கொண்டிருப்பர். ஆனால் அவ்வாறு செய்யாமல், அரசியல் நிர்ணய சபையில் ஏதோ காரணங்களுக்காகக் கலந்துகொண்டு பின்னர் அவர்களின் கோரிக்கைகள் நிறைவேறாமல் போக, பகிஷ்காரம் செய்து, இன்றுள்ள நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எமது தலைவர்கள் சம்பவங்களை நிகழவிட்டு விட்டு, அதனால் இழுபட்டு வருவதனால் தான் கவிஞர் காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா, வண்ணை ஆனந்தன் போன்ற இளைஞர்கள் சிறைசென்று வாடவும் மற்றும் தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சோக நிகழ்ச்சிகள் எல்லாம் நிகழும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டன. இறுதியாக தங்களுடைய முதல் மூன்று கேள்விகளுக்கும் வருமாறு ஒரே விடையாகக் கூறிக் கொள்கின்றேன்.

கடந்த 30 வருடங்களாக எமது அரசியல் தலைவர்களின் அரசியல் ஈடுபாட்டின் தாக்கந்தான் என்னைச் சுதந்திரக்கட்சியில் சேரவைத்தது. இந்தக் கட்சி எதிர்கட்சியாக இருந்த காலத்தில் இருந்தே ஆதரவாளனுக, உறுப்பினனுக உள்ளேன்.

சிங்கத்தை அதன்குகைக்குள் நுழைந்தே சந்திக்கும் போர்ராட்டமரபும் உண்டு. அதற்கிணங்க இன்றுநாம் உள்ளோம். எமது கரங்கள் வலுப்பெறும். எமது இனத்தின் அபிலாஷைகளை அப்பொழுது நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையோடு உழைக்கின்றோம்.

பாகிஸ்தான் சிற்பி முகமதுஅலி ஜின்னு ஆரம்பகாலத்தில் இந்தியன் காங்கிரஸில் உறுப்பினராக, முக்கிய பதவி வகிப்பவராக இருக்கவில்லையா? அதேமாதிரி இன்று நாம் இருக்கின்றோம்.

அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரின் தலைமையில் உள்ள சுதந்திரக்கட்சி அணி தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிச்சயம் நிறைவேற்றி வெற்றியளித்துத்தரும் என்று அசைக்க முடியாத நம்பிக்கையோடு உழைக்கின்றோம்.

எனவே தங்களின் இறுதிக் கேள்விக்குப் பதில் அவசியம் இல்லை. இருந்தபோதிலும் ஒரே ஒரு வார்த்தை.

ஏழுவருடங்களுக்கு முன்னர் சுதந்திரக் கட்சி எதிர்க்கட்சியில் இருந்தபோது, தேசிய தினசரிப் பத்திரிகை ஒன்றில் கடமையாற்றும்போது சேர்ந்தேன். ஆட்சி அஸ்தமிக்கும் நிலை ஒருபோதும் ஏற்படாது. அவ்வாறான நிலை தங்கள் எண்ணப்படி ஏற்பட்டாலும் தொடர்ந்தும் எமது அரசியல் பணியை எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நடத்துவோம். (அ)

# 500 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், திங்கள்

'கட்டுப்பாட்டு விலையை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இறைச்சிக் கடைக்காரர் ஒருவருக்கு 500 ரூபா அபராதமும், நீதிமன்றம் கலையும்வரை சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

நெல்லியடியைச் சேர்ந்த வி.சுந்தவனம் என்பவர் எலும்பில்லாத ஆட்டிறைச்சியின் கட்டுப்பாட்டு விலை ஐந்துரூபாவாக இருக்கையில் அதனை இரண்டு ரூபா கூட்டி 7 ரூபாவுக்கு விற்றதாக யாழ்.விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எம்.சிவபாதசுந்தரம் இவ்வழக்கை பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதனையடுத்து நீதிபதி திரு.ஏ.கெங்காதரம் மேற்படி தண்டனை விதித்தார். (உ)

## "வேறுபாடு எழக்கூடாது"

நீர்வேலி, ஞாயிறு

'விளையாட்டுப் போட்டிகளின்போது சிறியபாடசாலைகள், பெரிய பாடசாலைகள் என்ற வேறுபாடு எழவேகூடாது' என்று நல்லூர் கல்வி வட்டார மெய்வல்லுநர்போட்டிக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் பிரதம கல்வியதிகாரி திரு.அ. பொ. சிவபாதம் கூறினர்.

யாழ். இந்துமகளிர் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

வட்டாரக் கல்வியதிகாரி திரு. கு. சோமசுந்தரம் போட்டிக்குத் தலைமைதாங்கினர்.

திரு. சிவபாதம் தொடர்ந்து பேசுகையில், 'வெற்றியைக் கண்டு தலைமறப்பகோ தோல்வியைக் கண்டு துவண்டு விடுவதோ கூடாது' என்றார்.

திருமதி ரி. சிவபாதம் பரிசில்களை வழங்கினர். (உ)

## கிளிநொச்சியில் லொறிமோதி பெண்மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சி சந்தைக்கு அருகில் லொறியொன்றினால் மோதப்பட்ட 45 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமானர்.

லீலாவதி என்னும் பெயருடைய இப்பெண்ணைப் பற்றிய வேறுவிபரங்கள் எதுவும்தெரியவில்லை என்றும் சடலம் அடையாளம காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## மொரார்ஜியின் செயலாளர்

புதுடில்லி, ஏப். 3

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் பிரதம காரியதரிசியாக திரு. வி. சங்கர் நியமிக்கப்பட்டுள்ளார். (இ)

## வட்டார விளையாட்டுப் போட்டி

நீர்வேலி, ஞாயிறு

கோப்பாய்க் கல்வி வட்டார விளையாட்டுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியும், பெண்கள்பிரிவில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றன.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் வட்டாரக் கல்வியதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் புத்தூர் மக்கள்வங்கி முகாமையாளர் திரு. வ. வி.சிதம்பரப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

திருமதி இ. சிதம்பரப்பிள்ளை பரிசில்கள் வழங்கினர்.

52 பாடசாலைகள் இப்போட்டியில் பங்குபற்றின.

உடற்கல்வி அதிகாரி திரு. வி. தங்கராசா கொடியேற்றி ஆரம்பித்துவைத்த இவ்விழாவில் திரு. சி. சிவானந்தம் நன்றியுரை நிகழ்த்தினர். (உ)

# இடதுசாரி முன்னணியின் நோக்கம் யு.என்.பி.யை ஆட்சிபீடம் ஏற்றுவதே

## முன்னணி உருவாகமாட்டாது என்றும் கூறுகிறார் பிரதமர்

கொழும்பு, ஞாயிறு "இடதுசாரிகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சிலர் இடதுசாரிமுன்னணிஒன்றை அமைக்க முயற்சித்து வருகிறார்கள். அவர்களின்நோக்கம் ஐக்கியதேசியக் கட்சியிடம் ஆட்சிபீடத்தை ஒப்படைப்பதே ஒழிய தாம் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்பதல்ல"

இவ்வாறு பிரதமர்திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பிங்கிரியாவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

இடதுசாரி முன்னணி ஒன்றை அமைக்கும்முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்குள் இப்போது பெரும் பிரச்னை ஒன்று எழுந்துள்ளது. அவர்கள் இப்போது தமது முன்னணிக்கு யாரைத் தலைவராகத் தெரிவு செய்வது என்று தெரியாது விழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் இந்த முன்னணி இப்போது உருவாகப் போவதில்லை என்றும் பிரதமர் கூறினார்.

திருமதி பண்டாரநாயகா மேலும் பேசுகையில் கூறியதாவது:

### பயனற்ற கல்லோயாத் திட்டம்

யு. என். பி. தனது ஆட்சிக்காலத்தில் பயனுள்ள எந்த ஒரு அபிவிருத்தித் திட்டத்தையும்மேற்கொள்ளவில்லை. அவர்களினால் உருவாக்கப்பட்ட கல்லோயாத்திட்டம் எதுவித பிரயோசனமுமற்றதாக இருக்கிறது. அதற்காகச் செலவழித்த பணத்தைக்கூடத் திருப்பி எடுக்கமுடியவில்லை.

### தேசியமயம்......

கம்யூனிஸ்ட், சமசமாஜிகளுடன் நாம் ஆட்சிபீடத்திலிருந்தபோது தேசியமயக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது என்று கூறுகிறார்கள். 1956-ம் ஆண்டு சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சி செலுத்தியபோதே பஸ் சேவையும் துறைமுக சேவையும் தேசியமயமாக்கப்பட்டன.

### 30 ஆயிரம் ஆசிரியர்கள்

65-ம் ஆண்டு முதல் 70-ம் ஆண்டுவரை யு. என். பி. ஆட்சிக்காலத்தில் 668 ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டனர். ஆனால் எமது ஆட்சிக்காலத்தில் கடந்த 7 ஆண்டுகளில் 30 ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பும் வழங்கியுள்ளோம்.

### பாடசாலைகள் மூடப்பட்டன

யு. என். பி. ஆட்சிக்காலத்தில் கஷ்டமான பிரதேசங்களில் உள்ள பல பாடசாலைகள் ஆசிரியர்கள் இன்றி மூடிவிடவேண்டிய நிலை ஏற்பட்டது. எமது ஆட்சிக்காலத்தில் நிலைமை அப்படி இல்லை.

### மீண்டும் ஆட்சிபீடம் ஏறுவோம்

மீண்டும் நாமே ஆட்சிபீடம் ஏறுவோம். இதில் சந்தேகத்துக்கு இடமில்லை என்றும் பிரதமர் கூறினார். (இ)

## நயினை அம்பாளுக்குப் பிரார்த்தனை

வேலணை, ஞாயிறு மூதறிஞரின் நலம் வேண்டி நயினாதீவு மக்கள் நாகபூஷணி அம்மன் கோவிலில் விசேட பூசை ஒன்றை நடத்தினர்.

### வேலணையில்

வேலணை வங்களாவடி முருகன் கோவிலில் விசேட அபிஷேகமும், பூசையும் நடைபெற்றன. இவ்வைபவங்களை வேலணைத் தமிழ் இளைஞர் பேரவையினர் ஏற்பாடுசெய்திருந்தனர். (உ)

### சில்லாலையில்

பண்டத்தரிப்பு, ஞாயிறு சில்லாலை தமிழ் இளைஞர் பேரவைக் கிளையினர், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.செல்வநாயகத்தின் 80வது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை விசேட பிரார்த்தனைப் பூசையொன்றைச் சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் நடாத்தினார்கள்.

பங்குக்குரவர் வண. பிரான்சிஸ் சுலாஸ் அடிகளார் இவ் விசேட பூசையை நடாத்தினார்.

பெருந்தொகையான தமிழ் இளைஞர்களும், இளம் பெண்களும் மற்றும் பொதுமக்களும் இப்பூசையில் கலந்து கொண்டனர்.

சில்லாலை தமிழ் இளைஞர் பேரவையினரால் அன்னதானமும் வழங்கப்பட்டது. (க)

## இன்று ஆஜர்

கொழும்பு, திங்கள் வெளிநாட்டு நாணய மோசடிக்குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் மட்பாண்டக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அனுரா விஜயரத்ன இன்று (திங்கள்) காலை வெளிநாட்டு நாணய மோசடி குற்றவியல் ஆணைக்குழு முன்நிலையில் ஆஜர் செய்யப்படுவார். (ம-இ)

# "கொழும்பு வீதிகளில் 'ஸ்ரீ' கார்கள்; ஊவாவீதிகளில்ஒடேந்தும்தொழிலாளர்

## சமுதாய அதிகாரம்மாறவேண்டும் என்கிறார் பதுளைஆயர்

கொழும்பு, ஞாயிறு "சமயமும் கலாச்சாரமும் சமுதாயத்தில் முக்கிய இடம் பெறுபவை. நாட்டைத் துன்புறுத்தும்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான ஒரே வழி, அரசியல் பொருளாதார சமுதாய அதிகாரத்தை செல்வாக்குள்ள ஒரு சிலரிடம் இருந்து பெரும்பாலான மக்களுக்குமாற்றித் தக்க சமூகவுடைமை முறையொன்றைக் கையாள்வதாகும் என்று பதுளை ஆயர் லியோ நாணயக்கார கூறினார்.

கொழும்பு சமூக சமயநிலைய ஒழுங்கு செய்த பொதுத்தேர்தல்கள் பற்றிய மூன்றுவது கருத்தரங்கு நிலையப் பணிமனையில் நடைபெற்றபோது இவ்வாறு கூறினார்.

கிறிஸ்தவமும் சமூகவுடைமையும் என்பது பற்றி ஆயர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- "இத்தகைய மாற்றத்தை பலவந்தமாக செய்ய வேண்டியதில்லை. இன்று நிலவும் சமயப் பண்பாடு நடைமுறைகளைத்தகர்க்கவும் வேண்டியதில்லை.

மனிதன் மனிதனை நடாத்தப்படவேண்டுமென்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். ஆனால் அவர்கள் சமுதாயத்தின் வாழ்க்கைத் தரங்களில் உள்ள பரந்த ஏற்றத் தாழ்வுகளை உணருவதில்லை.

### கொழும்பில்ஸ்ரீகார்கள்; ஊவாவில் ஓடேந்தும் தொழிலாளர்

கொழும்பில் 6ஸ்ரீ 7ஸ்ரீ மோட்டார் வண்டிகள் பார்க்குமிடமெல்லாம் ஓடித்திரிகின்றன. ஆனால் ஊவா மாகாணத்தில் தோட்டத் தொழிலாளர்தெருக்களில் ஓடேந்திப் பிச்சையெடுத்து வாழ்கிறார்கள். சமயக் கிரியைகளிலும், ஆன்மீக விடயங்களிலும் ஈடுபட்டுள்ள கிறிஸ்து சமயம் இது போன்ற அன்றாட வாழ்க்கை நிலைமைகளை உணர்ந்து அவற்றுக்கு ஆவன செய்ய வேண்டும்.

### இஸ்லாமும் சமூகவுடைமையும்

அடுத்து அல்ஹாஜ் எஸ். எம். ஏ. ரஷீட் "இஸ்லாமும் சமூகவுடைமையும்" என்னும் பொருள்பற்றி பேசுகையில் இஸ்லாமிய சோஷலிஸம் 1400 ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது. எனினும் அதற்கும் இன்றைய சோஷலிஸத்திற்கும் வேறுபாடு உண்டு.

நபிநாயகம் அவர்கள் எப்போதும்தம் செல்வத்தைப் பகிர்ந்தளித்தார் மண்குடிசையில் வாழ்ந்தார். எளிய உணவை உண்டார். மனிதன் சுரண்டப்படுவதைக் கண்டித்தார். எஜமானுக்கும் வேலைக்காரனுக்குமிடையே பேதம்காட்டாது அனைவரும் சமமாகக் கருதப்படவேண்டுமெனப் போதித்தார். அதனைத் தமது சாதனையிலும் எடுத்துக் காட்டினார்.

பொதுச்சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்று நபிநாயகம் அவர்கள் சொன்னார்.

இன்றுஇலங்கையிலும்வெளிநாடுகளிலும் அரசியல் பொருளாதாரச் செல்வாக்குப் பெற்றுள்ள முஸ்லிம் தலைவர்கள் இஸ்லாமிய சோஷலிசத்தைக் கடைப்பிடிப்பதில்லை. நபிகள் கூறியவாறு நடந்து வந்தால் உண்மையான சமூகவுடைமைச் சமுதாயத்தை நிறுவுவது கடினமாகாது" என்றார். (உ)

• • •

## 'நவரச மன்னன்' பட்டம்

யாழ்ப்பாணம், திங்கள் ஒலி, ஒளிச்சாதனங்களினதும் ஒப்பனையினதும் உதவியின்றி "நவரச நாடகம்" என்ற நிகழ்ச்சியை நடாத்தி வரும் திரு. விஜயேந்திரனுக்கு "நவசரமன்னன்" என்னும் பட்டம் வரணியில் வழங்கப்பட்டுள்ளது.

அவரது நவரச நாடகம் 73-வது தடவையாக வரணி மகாவித்தியாலயத்தில் மேடையேறியபோது வித்தியாலய அதிபர் பண்டிதர் வித்துவான் பொ.கந்தையனார் "நவரச மன்னன் என்ற பட்டத்தை வழங்கினார்.


# தலை பேன் போகிறதா






பாடசாலை செல்லும பிள்ளைகளின் தாய்மார்களுக்கு அப்படித்தான்... ஆனால் கெமெக்ஸீனைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தால் அப்படியிருக்கத்தேவையில்லை. தலைப்பேனை முற்றாக ஒழிக்க துரிதமான, நம்பிக்கையான வழி அதுவே. உங்கள் பிள்ளைகளின் தலையில் கெமெக்ஸீனை ஒரு தடவை உபயோகித்தாற் போதும்- பேன் முற்றாக அழிந்துவிடும். மீண்டும் பேன் வராமல் தடுப்பதற்கு 3 வாரங்களின் பின்னர் மீண்டும் உபயோகியுங்கள கெமெக்ஸீன் பாதுகாப்பானது, புண்படுத்தாதது. இதமான வாசனையுடையது.

கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டட், த. பெ. எண் 352, ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு-1. தெலிபோன்: 28421-6.

**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன், பாரதி
**தங்கத் தம்பி**

**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா
**அன்னமிட்டகை**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவகுமார்-ஜெயசுதா
**பட்டிக்காட்டு ராஜா**

**RIO** (Jaffna) Daily 4 Shows
**THE AGE OF GALLENTRY**
ACTION PACKED COMEDY

**றீகல்** (யாழ்ப்பாணம்)
முத்துராமன் — நாகேஷ்
ஜெயபாரதி நடித்த
தினசரி 2-30, 6-30, 9-45, மட்டும்
**அனுபவி ராஜா அனுபவி**
டைரக்ஷன்: கே: பாலசந்தர்
From 5-4-77 **Man at the Top** (Adults only)
(Color)

**ராணி** [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன் நடித்த
**பாக்கியலட்சுமி**

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
ஃ சிவாஜி (இருவேடம்)
ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
**பாட்டும் பரதமும்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ். நகர்)
எம். ஜி. ஆர்—ஈ. வி. சரோஜா
நம்பியார்-எம். ஆர். ராதா
தினசரி 4 காட்சிகள் நடித்த
**கொடுத்து வைத்தவள்**

9-வது வெற்றி வாரம்!
**மனோகரா** (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
ஆனந்தன், குமாரி சச்சு
ஈ. வி. சரோஜா, அசோகன்
நடித்த
தினசரி 4 காட்சிகள்
**வீரத் திருமகன்**
(புத்தம் புதிய பிரதி)

**வெலிங்டன்** [யாழ். நகர்]
ஃ முத்துராமன் ஃ சுஜாதா
நடித்த
தினசரி 4 காட்சிகள்
**வாழ்ந்து காட்டுகிறேன்**

**லிடோ** போன்: 7693 [யாழ். நகர்]
சிவாஜி, கே. ஆர். விஜயா
பத்மினி நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
**இருமலர்கள்**
(புதியபிரதி)


# காங்கிரஸுக்குள் சிக்கல் நிலைமை

## ராஜினுமா வலியுறுத்தல்

புதுடில்லி, ஏப். 3

காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்கள் யாவரும் கூட்டாக ராஜினுமாச்செய்யவேண்டுமென்ற வற்புறுத்தல் சிக்கலான நிலைமையை அக்கட்சிக்குள் உருவாக்கியுள்ளது.

திரு. யார்தென் என்ற கமிட்டி உறுப்பினர் தாம் பதவியை ராஜினுமா செய்ய முடியாது என்று மறுத்துவிட்டார்.

பதவியை ராஜினுமாசெய்துவிட்டதாககூறப்பட்டரவி என்னும்மற்ெருருஉறுப்பினர் ராஜினுமாப் பத்திரத்தில் தம்மை மிகத் தந்திரமாக ஏமாற்றிக்

## எதிரொலி

கையெழுத்து வாங்கிவிட்டார்கள் என்று காங்கிரஸ் தலைவர் திரு. பரூவாவிடம் முறையிட்டுள்ளார்.

### வித்தியாசம் அற்றுவிடும்

காரியக்கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாக ராஜினுமாச்செய்துவிட்டால் காங்கிரஸின் தோல்விக்குக் காரணமாக இருந்த முன்னுள் மத்திய அமைச்சர் பன்சிலாலுக்கும் தமக்கும் வித்தியாசமில்லாது போய்விடும் என்றும் திரு. ரவி கூறியுள்ளார்.

காரியக்கமிட்டி உறுப்பினர்கள் கூட்டாக ராஜினுமாச் செய்யவேண்டுமென்ற தீர்மானம் திருமதி இந்திரா காந்தியின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதே வேளை திட்டமிட்டபடி காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் இம் மாதம் 12-ம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)



## தவக்கால நற்சிந்தனை

''மகா இன்பமும் அன்பும் நிறைந்த ஆண்டவரே உம்மை இச்சமயம் எல்லாப் பயபக்தியுடனும் வரவேற்க அடியேன் வாஞ்சிக்கிறேன், என்னுடைய பலவீனமும், நான் அனுபவிக்கிற கஷ்டமும் இவ்வளவென்றும் எவ்வளவு பெரிய தீமைகளிலும் அக்ரமங்களிலும் நான் ஆழ்ந்திருக்கிறேனென்றும், எவ்வளவு அடிக்கடி என்னில் உபத்திரவங்களும் துன்பங்களும் சோதனைகளும் பாவக்கறைகளும் உண்டாகிறதென்றும் தேவரீர் அறிவீர்.

இவைகளெல்லாம் நீங்கும்படி தேவரீரிடம் வருகிறேன். ஆறுதலையும் சகாயத்தையும் அருளும்படி உம்மை நோக்கி கெஞ்சுகிறேன். தேவரீர் எல்லாவற்றையும் அறிவீர் என்னில்.

உள்ளவைகளெல்லாம் உமக்கு வெளியரங்கமாக விருக்கின்றன. தேவரீர் ஒருவரே எனக்குத் துணைசெய்யவும் என்னை முழுவதும் ஆறுதல் படுத்தவும் வல்லவர் ஆகையால் உம்மை நோக்கி அபயமிடுகிறேன.

(கிறீஸ்துநாதர் அனுசாரம்)

கடவுள் நம்மை நன்ருக அறிந்திருக்கிருர். நாம் எதை ரகசியம் என்று கருதி மூடி மறைத்து வைத்திருக்கிருேமோ அவைகள் அத்தனையும் ஆண்டவனுக்கு நன்ருகத் தெரியும். நாம் தீமை செய்யும்போது நம்மைத்தண்டிக்கிருர். நன்மை செய்யும்போது நமக்குக்கருணை காட்டி நன்மைபுரிகிருர். பூனை தன்குட்டியை வாயினுல் கௌவிக்கொண்டு போகும் போது குட்டி கத்துவதில்லை. பூனையின் பல் குட்டியின் உடலைத் துன்புறுத்துவதில்லை. ஆனுல் அதே பூனை எலியைப் பிடிக்கும்போது?

—ஞானஒளி

## புளியங்கூடல் மகாமாரிக்கு லட்சார்ச்சனை

ஊர்காவற்றுறை, திங்கள்

ஊர்காவற்றுறை புளியங்கூடல் ஸ்ரீமாகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் லக்ஷநாம ...சனை நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றது.

8-ந் தேதி வெள்ளிக்கிழமை பகல் மகாசங்காபிஷேகமும் குளிர்த்தியும் நடைபெறும்.

# சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டது!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்துக்குளதிராக இன்று நான்காம் தேதி திங்கட்கிழமை நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்ட சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

யாழ் மாநகரபலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பற்றித் தாங்கள் உணவு கூட்டுறவு அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகாவிடம் செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்து இம்மாதம் இருபதாம் 20-ம் தேதி விசாரணைக்கமிஷன் ஒன்றை நியமிப்பதாக அமைச்சர் அறிவித்துள்ளதால் சத்தியாக்கிரகம் உண்ணுவிரதம் ஆகிய நடவடிக்கைகளைக் கைவிட்டிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதி வாலிபமுன்னணியின் அமைப்பாளர் என்று கூறும் திரு. வே. தங்கராஜா தெரிவிக்கின்ருர்.

இதேசமயம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதி வாலிபமுன்னணியின் அமைப்பாளரும் தலைவரும் திரு. வி. இ. ஸ்ரீபன் என்பவரே என்றும் இந்த முன்னணிக்கும் சத்தியாக்கிரகம் உண்ணுவிரதம்போன்ற நடவடிக்கை யோசனைகளுக்கும் எதுவித தொடர்புமில்லையென்றும் சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முழங்காவில் திட்டத்தில்

## 75 வாலிபருக்கும் 25 யுவதிகளுக்கும் காணி!

யாழ்ப்பாணம், திங்கள்

முழங்காவில் குழாய் நீர்த் திட்டத்தில் நூறுபேருக்கு கிளிநொச்சி அபிவிருத்திச் சபையின் விவசாயத்திட்டத்தின் கீழ் காணிகள் வழங்கப்பட்டன.

25 படித்தபெண்களுக்கும் 75 படித்த வாலிபர்களுக்கும் இதற்கான பத்திரங்களை கிளிநொச்சி பிரதேச அபிவிருத்திச் சபையின் தலைவரும், தபால் தந்தித்தொடர்பு, வீடமைப்பு நிர்மாண அமைச்சருமான திரு செல்லையா குமாரசூரியர் வழங்கினுர்.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. அ.குலநாகயம் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் யாழ். மாவட்ட காணி உத்தியோகத்தர்திரு.எம்.குணநாயகம், பிரதேச அபிவிருத்தி திட்டமிடல் பணிப்பாளர் திரு கே. சி. யோகேஸ்வரன், கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு யோகநாதன் அபிவிருத்தி உத்தியோகத்த திரு. கே. இராசநாயகம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (வண்-றி)

## கோர்ட்டுக்கு வராத பெண்ணுக்கு பிடிவிருந்து

மாவிட்டபுரம், வெள்ளி

தெல்லிப்பழைவிபசாரவிடுதி வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிய பெண் ஒருவருக்கு மல்லாகம் நீதிபதி பிடி விருந்து பிறப்பித்தார்.

தெல்லிப்பழையில் விபசார விடுதிவைத்து நடத்தியதாகச் சந்தேகிக்கப்பட்டு காங்கேசன் துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட 4 இளம் பெண்களும், 3 வாலிபர்களும் மல்லாகம் நீதிபதி முன் ஆஜர்செய்யப்பட்ட சமயம் அவர்கள் தாம் சுற்றவாளிகள் எனக் கூறியதையடுத்து அவர்களுக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணைக்காக நீதிபதி டி.யேசுரத்தினம் முன்னிலையில் எடுக்கப்பட்டசமயம் லீலாவதி என்ற பெண் நீதிமன்றத்தில்சமுகமளிக்கவில்லை. அவர் பிரசவித்திருப்பதாகத் தெரிவிக்கப் பட்ட போதும் அதற்கான ஆதாரங்கள் காட்டப்படாததையடுத்து நீதிபதி அவருக்குப் பிடிவிருந்து பிறப்பித்து விசாரணையை ஜூன் 27-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ)

## வண்ணை சிவன்: பூங்காவன உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர ஸ்வாமி தேவஸ்தான 20-ம் திருவிழா பூங்காவன உற்சவம் இன்று நடைபெறுகிறது. காலை 10 மணிக்கு அம்மன் பூங்காவனத்திற்கு எழுந்தருளுவார். 4-30மணிக்கு வீதிவலம் வருதலும், 6 மணிக்கு கன்னி ஊஞ்சலும் நிகழும். விசேஷ மேளக்கச்சேரிகளும், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திருவிளையாடற்புராண விரிவுரைத் தொடர் சுகாப்பிரசங்கமும், சுகிர்சுந்தரலிங்கத்தின் பக்திப் பாடல் இசையும் இடம் பெறும். (ஆ)

## 'கோபாலன்' கிண்ணம் இலங்கை வசம்!

சென்னை, ஏப் 3

இலங்கை தலைவர் தெரிவுக் கிரிக்கெட்கோஷ்டிக்கும், தமிழ்நாடு தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில், சென்னையில் 'கோபாலன்' வெற்றிக் கிண்ணத்துக்காக நடைபெற்ற மூன்றுநாள் கிரிக்கெட் போட்டி வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

இலங்கை கோஷ்டி முதல் இன்னிங்ஸில் சிறப்பாகத் துடுபெடுத்தாடி 459 ஓட்டங்களைப் பெற்றது. தமிழ்நாடு முதல் இன்னிங்ஸில் 289 ஓட்டங்களை மட்டுமே பெற்றதினுல், 'கோபாலன்' வெற்றிக் கிண்ணத்தை இலங்கைக் கோஷ்டி தம்வசமாக்கிக் கொண்டது.

இலங்கைக் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் ஆட்டமுடிவில் 3 விக்கெட் நஷ்டத்துக்கு 143 ஓட்டங்களைப் பெற்றது. (ஆ)

## மெய்வல்லுநர்ப் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

உடுவில் கல்வி வட்டார மெய்வல்லுநர்ப் போட்டி இன்று பிற்பகல் சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

ஈழநாடு
The EELANADU

# கரடி தாக்கியவர் சுகமடைகிறார்

யாழ்ப்பாணம், திங்கள்
கரடிதாக்கிய வாலிபர் சணேஷின் ஒரு கண் பார்வையை இழந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாம்.

முள்ளியவளையைச் சேர்ந்த இவ்வாலபர் சம்பவதினம் மாலை சேனைக்குக் காவலாக நின்றபோது பின்புறமாகவந்து கரடி அவரைத் தாக்கியதாகவும் தம்கரத்தில் அந்நேரம் இருந்த 'டோர்ச் லைட்டால்' அவர் கரடியைத் தாக்கியபோது அது ஓடிகாட்டுக்குள் மறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. கரடியால் முகம் கடித்துக் குதறப்பட்டநிலையில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு அவசர சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

அவரது ஒரு கண் பாதுகாக்கப்பட்டுவிட்டதாகவும் மற்றக் கண் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளமையால் அவர் பார்வையை இழக்கும் ஆபத்து இல்லவும் நீங்கிவிடவில்லை யென்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிராபத்து எதுவும் இல்லை யெனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இன்று ஈழகேசரி பொன்னையா விழா

யாழ்ப்பாணம், திங்.
ஈழகேசரிப்பொன்னையாவின் 26-வது ஆண்டுவிழா இன்று மாலை குரும்பசிட்டிசன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெறுகிறது.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திரு. சி. மௌனகுரு, திருமதி சித்திரலேகா மௌனகுரு, ஆகியோர் உரையாற்றுவர். காத்தவராயன் நாட்டுக்கூத்தும் நடைபெறும். (அ)

## நினைவுவிழாவும் பொதுக் கூட்டமும்

யாழ்ப்பாணம், திங்கள்
வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் டாக்டர் சாமுவேல் ஹனிமான் விழாவும், 18 வது வருடாந்தப் பொதுக் கூட்டமும் இம்மாதம் 10 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணக் கல்வி நிலையத்தில் நடைபெறவிருக்கிறது.

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி தலைமை வகிப்பார். டாக்டர்கள் ஏ. தர்மலிங்கம், கே.எம். துரைசிங்கம், எம். வேலுப்பிள்ளை, வி.கே. விஸ்வலிங்கம், தி. பரமசிவம் முதலானோர் சொற்பொழிவாற்றுவர். (உ)

## மரண அறிவித்தல்
### திருமதி பொன்னையா பாறுவதி

யாழ்ப்பாணம் - ராமகிருஷ்ணஸ் அதிபர் சி. பொ. வேலாயுதபிள்ளை, திருமதி மகேஸ்வரி சின்னையா (சிங்கப்பூர்), திருமதி இரத்தினம்மா காசிநாதன் (ஸ்ரீலங்கா நேவி, திருகோணமலை) ஆகியோரின் தாயார் காலமாகிவிட்டார்.

நந்தாவில் அம்மன்கோவில் இல்லத்திலிருந்து (இன்று) 4-4-77 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் மயானத்திற்குத் தகனக்கிரிகைக்கு எடுத்துச்செல்லப்படும்.

சி. யோ. வேலாயுதபிள்ளை.

5858

## காணவில்லை

கோண்டாவில் மேற்கு பண்டாரமடத்தடியைச் சேர்ந்த செல்வன் மா. குணரத்தினம் என்பவரை 28-03-77 முதல் காணவில்லை. இளம் பொது நிறம். நிறஉடுப்புகள் கண்ணாடி, தொப்பி அணிந்திருப்பவர். கண்டவர்கள் அண்மையிலுள்ள பொலிஸ்நிலையத்திற்கு தகவல் தரவும்.

மா. லோகநாதன்,
காங்கேசன்துறைவீதி,
கோண்டாவில்.

5859

## இன்று திருக்கல்யாணத் திருவிழா

# சைவம் வளர்த்த வண்ணை சிவன் ஆலயம்

பிரசித்திபெற்ற வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் பங்குனி மஹோற்சவம் சிவனுக்கும், ஆடிப்பூர மஹோற்சவம் அம்பாளுக்கும் நடைபெறும். இவ்விரு மஹோற்சவத்திலும் பங்குனி மஹோற்சவத்தில் பஞ்சரதங்களில் இறைவன் திருக்கோலம் கண்டுகளிக்கலாம்.

இந்த இரு ரதோற்சவங்களையும் தொன்றுதொட்டு பல்லாண்டுகளாக வைத்திய சிகாமணி சின்னத்தம்பி பரம்பரையினர் தொடர்ந்து உபயமாக ஏற்று நடத்திவருகின்றனர்.

வைத்தீஸ்வரப் பெருமானிடம் மிக ஈடுபாடுள்ள இக்குடும்பத்தினர் பக்திசிரத்தையோடு இத்திருநாளைச் சிறப்பாக நடத்திவருகின்றனர்.

### அந்தணர் பரம்பரை

வண்ணை வைத்தீஸ்வரப் பெருமான் ஆலயத்தில் தொண்டாற்றிய அந்தணர் பரம்பரையில் நான்கு பரம்பரைகள் குறிப்பிடத்தக்கவை. அம்பிக்குருக்கள், வைத்தியநாதக்குருக்கள், பொன்னுச்சாமி ஐயர், சுந்தரமையர் ஆகிய நான்கு குடும்பங்களும் குறிப்பிடத்தக்கவை. அம்பிக்குருக்களின் பரம்பரையில் இன்று இவ்வாலயத்தின் சிவாச்சாரியாராக சிவாகம ஞானபானு சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்களும், அவர் தவப்புதல்வனும் தொண்டாற்றி வருகின்றனர். இவ்வாலயத்தில் ஆக்கபூர்வமான பலபணிகளை ஆற்றிவருகின்றார் சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்கள். ஸ்ரீ வைத்தியநாதக்குருக்களின் புதல்வர் சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் தொண்டாற்றி வருகின்றனர். பொன்னுச்சாமி ஐயரின் பரம்பரையில் அவரது பேரர் பொன்னுச்சாமிஐயரின் மறைவுடன் தொண்டு முற்றுப்பெற்றுவிட்டது. ஸ்ரீசுந்தரமையர் பரம்பரையில் இன்று மாதொருபாகனுக்கு வழிவழி அடிமைசெய்பவரே ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத பரமாசார்ய ஸ்வாமிகள். வடக்கு ரதவீதி ஒருகாலத்தில் அந்தணர் வீதியாக இருந்தது. இக்கோயில் அந்தணர் பரம்பரையினர் இவ்வீதியில் இருந்ததால் ஒருகாலத்தில் ஐயன்தெரு என வழங்கப்பட்டுவந்துளது.

### சைவம்வளர்த்த வஸந்த மண்டபம்

வண்ணை வைத்தீஸ்வரப் பெருமான் ஆலய வஸந்த மண்டபம் சைவமணம் கமழும் மண்டபம். ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் தமது முதற்பிரசங்கத்தை இவ்வஸந்தமண்டபத்திலேயே தொடங்கினார்கள். அவர் வெள்ளிதோறும் இம் மண்டபத்தில் விரிவுரையாற்றினர். அவரதுமருகரும் மாணாக்கருமாகிய வித்துவசிரோன மணி பொன்னம்பலபிள்ளை இவ்வசந்த மண்டபத்தில் கம்பராமாயண விரிவுரை பலகாலம் தொடர்ந்து ஆற்றினர். இவர்களைத்தொடர்ந்து சச்சிதானந்த ராஜயோகிகள் எனும் சங்கர சுப்பையர்ஸ்வாமிகள். பண்டிதர் மாணிக்கத் தியாகராசா ஆகியோர் பல விரிவுரைகள் ஆற்றினர். ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்யஸ்வாமிகளது முதல் இன்னிசை விரிவுரை 1934 ஆம் ஆண்டுமாசி சிவராத்திரியில நடைபெற்றது. பலதொடர் விரிவுரைகள் ஸ்வாமிகள் ஆற்றிவருகின்றனர். சிவத்திரு பொன்னுச்சாமிச் செட்டியார் சிவத்திரு வைத்தியலிங்கச் செட்டியார், திருமதி, கண்ணம் ஆச்சி தற்போதைய தர்மகர்த்தா திரு. கந்தப்பச் செட்டியார் ஆகிய நாலுபேருடைய காலத்திலும் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் விரிவுரைகளாற்றி, பாராட்டுப் பெற்றுள்ளனர் ஸ்வாமிகளின் பின் இடையிடை ஸ்வாமிகளின் மாணவனும் ஆலய ஓதுவாருமாகிய கணேசசுந்தரனும், சிவஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவும் திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகமும் விரிவுரை ஆற்றுகின்றனர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் ஞானபரம்பரை ஆலயச் சமயப்பணியில் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் ரதோற்சவத்தை யடுத்து நேற்று தீர்த்தத் திருவிழா நடைபெற்றது இன்று திருக்கல்யாண விழா நடைபெறுகிறது.

—சிவனடியான்

# திடீர் தாக்குதல்: நால்வர் படுகாயம்
## கற்கோவளத்தில் சம்பவம்

நெல்லியடி, ஞாயிறு
பருத்தித்துறை கற்கோவளத்தில் இரவு வேளை நடைபெற்ற திடீர்த்தாக்குதல் சம்பவம் ஒன்றில் நால்வர் படுகாயமடைந்து மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எழுவர்கொண்ட கோஷ்டி ஒன்றினால் பி. அருந்தவராஜா, ஏ. ராஜநாயகம், ஏ. சோதிநாயகம், பி. கந்தையா என்ற நால்வருமே காயமடைந்தவர்களாவர்.

கற்கோவளத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின கருத்தரங்கில் வைத்தே இத்தாக்குதல் நடைபெற்றதாகவும் சொந்தப் பகையே இத்தாக்குதலுக்குக் காரணமென வும் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப எழுவர் கொண்ட கோஷ்டியைப் பருத்தித்துறைப் பொலிஸ் சார்ஜன்ட்திரு.பி.வேலாயுதபிள்ளை தேடி வருகிறார். அலவாங்கு, பொல்லு என்பன தாக்குதலின்போது பாவிக்கப்பட்டனவாம். (உ)

# சிவனொளிபாதமலை செல்ல குறுகிய பாதை

கொழும்பு, ஞாயிறு
சிவனொளிபாதமலைக்குச் செல்லும் யாத்திரிகரின் நலனைக் கருதி மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சு சிவனொளி பாதமலைக்கு குறுகியதூரப் பாதை ஒன்றை அமைக்கவுள்ளது.

இரத்தினபுரி, தொரணியகலை ஊடாக மஸ்கெலியா செல்லும் புதிய பாதை ஒன்றினை அமைச்சு 15 லட்சம் ரூபா செலவில் அமைக்கவிருக்கிறது.

முதல்கட்ட வேலைகளுக்கு 4 லட்சம் ரூபா செலவிடப்படும்.

இப் புதிய பாதை அமைக்கப்படுவதன் மூலம் 35 மைல்கள் தொலைவு குறையும் என தெரிவிக்கப்பட்டது. (உ)

......

## கொக்குவில் வாராஹி அம்பாள் கும்பாபிஷேகம்

கொக்குவில், ஞாயிறு
கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள் கோவில் ஆவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்றுநடைபெறுகிறது கடந்த 31-ம் திகதி முதல் இங்கு கிரியைகள் நடைபெற்று வருகின்றன.

கும்பாபிஷேகத்தைத்தொடர்ந்து 10 நாள் திருவிழாவும் 45 நாட்கள் மண்டலாபிஷேகமும் நிகழும். (ஆ)

......

## பால...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைபவம் ஒன்றில் திரு. ஜட்டி 'பத்மவிபூஷண்' 'பத்மபூஷண்' 'பத்மஸ்ரீ' பட்டங்களை வழங்கினார், (இ)

## கல்முனையில்
# 'காசிஆனந்தன் யார்?' வெளியீட்டு விழா

சாய்ந்தமருது, ஞாயிறு
"இந்நாட்டின் சிறுபான்மை இனமான முஸ்லிம்களின் உரிமைகளுக்காகப் போராடவும் எமது சமூகத்தின் நலனுக்காக வாதாடவும் அகில இலங்கை முஸ்லிம் ஐக்கிய முன்னணி பாடுபட்டுழைக்கும். இதற்காகவே தான் இம் முன்னணி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. சிறுபான்மை இனமாக இந்நாட்டில் வாழும் முஸ்லிம்களும் தமிழர்களும் தமது உரிமைகளை இழந்துவருகின்றனர். இந்நிலையைத் தடை செய்வதற்காக இன்று முஸ்லிம் ஐக்கியமுன்னணிக்கும் தமிழர்விடுதலைக் கூட்டணிக்குமிடையே இணக்கம் ஏற்பட்டது சிலருக்கு கசப்பாகவிருக்கின்றது"

இவ்வாறு அண்மையில் கல்முனை தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலகத்திற்கு முன்னால் நடைபெற்ற 'காசி ஆனந்தன் யார்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் பேசிய முஸ்லிம் ஐக்கியமுன்னணிச் செயலாளர் சட்டத்தரணி ஜனாப் ஏ. எம். சம்சுதீன் குறிப்பிட்டார்.

திரு. ஏகாம்பரம் தலைமையில் நடைபெற்றஇவ்விழாவில் சம்சுதீன் தொடர்ந்து பேசுகையில, "இந்நாட்டில் முஸ்லிம்சமூகத்துக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளை கண்டித்துப்பேச தற்போதைய முஸ்லிம் எம். பீக்கள் வாய்திறக்கவில்லை. அதனாலேயே முஸ்லிம்களின் உரிமைகளைக் காக்கவும் இழந்த உரிமைகளை மீண்டும் பெறவும் முஸ்லிம் ஐக்கிய முன்னணி பாடுபடும் என்பதைத் திடமாகக் கூறவிரும்புகிறேன்" என்றார்.

மற்றும் பலரும் பேசினர்

## மரண அறிவித்தல்
### சங்கரப்பிள்ளை இராமச்சந்திரன்
(வெள்ளையண்ணை)

நல்லூர் பண்டிதர் சங்கரப்பிள்ளை இராமச்சந்திரன் (வெள்ளையண்ணை) அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார். தகனக்கிரியைகள் இன்றுபிற்பகல் மூன்று மணிக்குச் செம்மணி மயானத்தில் நடைபெறும்.

5860

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna, Telegram: Eelanadu, Telephone 389, Registered as a Newspaper in